Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை (04.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 155













# இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஆதரவளிக்க மாட்டாது இந்தியா?

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக, அமெரிக்கா கொணடுவருமென எதிர்பார்க்கப்படும் மனித உரிமை மீறல் குறித்த தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்க மாட்டாதென்பது உறுதியாகி விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைக் குழுவில் கொண்டு வரப்படும் தீர்மானங்களை ஆதரிக்க மாட்டோம் என்று இந்தியா தெரிவித்திருப்பதன் மூலம், இலங்கையைக் காக்க இந்தியா முடிவு செய்திருப்பது தெரியவந்துள்ளது. எனவே போர்க்குற்றங்கள், மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதை இந்தியா ஆதரிக்காது என்பது இலங்கைக்கு நம்பிக்கையை அளித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைக் குழுவின் 19 ஆவது கூட்டம் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகி நடந்து வருகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது இராணுவத்தினர் புரிந்த போர்க்குற்றம் தொடர்பாக இதில் விவாதிக்கப்பட உள்ளது.

போர்க் குற்றங்கள் உள்ளிட்டவை தொடர்பாக இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா முன்மொழியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மனித உரிமைக் குழுக் கூட்டத்தொடரில் இந்தியா சார்பில் வாசிக்கப்பட்ட

(15 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி நிர்வாகசேவை III பரீட்சை முடிவு வெளியானது

(கொழும்பு)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் 2011 இல் நடத்தப்பட்ட கல்வி நிர்வாகசேவை தரம் III பரீட்சையில் சிங்கள, தமிழ் பரீட்சார்த்திகளில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 23 பேர் சித்திபெற்றதாகவும் இவர்களில் ஆறு பேர் தமிழர்களனெவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் விபரம் வருமாறு

ஜே.சந்திரபாலன் - கொழும்பு, ரீ.தர்மலிங்கம் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம், என்.கந்ததாசன் - அல்வாய், என்.பரமேஸ்வரன் - இளவாலை, ப.விவேகானந்தராசா - வவுனியா, ஆர்.ஜே.அன்ரனி - ஊர்காவற்றுறை.

## அபகீர்த்தியை ஏற்படுத்த அமெரிக்கா கடும் முயற்சி

### அமைச்சர் சமரசிங்க தகவல்

(கொழும்பு)

இலங்கை பிரநிநிதிகள் குழுவினரால் தெளிவுபடுத்தப்பட்டதை அடுத்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின்போது பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வந்ததாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் கலந்து கொண்ட அமைச்சர் உள்ளிட்ட இலங்கை பிரதிதிகள் குழு நேற்றுக் காலை நாடு திரும்பியது. இலங்கை தொடர்பில் பல்வேறு நாடுகளும் கொண்டிருந்த தவறான அபிப்பிராயங்களை இந்த கூட்டத்தொடரின்போது களைய முடிந்ததாக அமைச்சர்


(15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா மனித உரிமை அமர்வுகளை அவதானிக்கிறதாம் கூட்டமைப்பு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்ற அதேவேளை, தமிழ் மக்கள் சாரந்த அனைத்து விடயங்களை மிகவும் பக்குவமாகவும் நிதானமாகவும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மேலதிக ஆவணங்கள் சிலவற்றை ஜெனிவாவில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை நுணுக்கமாகக் கையாண்டு வருவதாகவும் குறிபபிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் விஷேட கூட்டம் நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி அலுவலகத்தில் நடைபெற்றது. இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின்போது ஜெனவாப் பேரவை தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டது. கூட்டமைப்பின் சில முடிவுகள் சில தினங்களாகக் கருத்து முரண்பாடுகளுக்கு வழிவகுத்திருந்தன. எனினும் அது தற்போது நிவர்த்திக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் பேரவை

(15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான தூதுவரை மாற்றுகின்றது அமெரிக்கா

(கொழும்பு)

அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டீனிஸ் தனது பதவியில் இருந்து விரைவில் மாற்றலாகிச் செல்லவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இவருக்குப் பதிலாக அமெரிக்காவின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான மைக்கல் ஜே சிஸன் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவரை நியமிப்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இவ்வறிவித்தலை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பின்னர் மைக்கல் ஜே சிஸன் தூதுவராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



(15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது சர்வதேச விசாரணை வட கத்தோலிக்க குருமார் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென வட இலங்கை கத்தோலிக்க சபையின் 31 குருவினர் ஐ.நா. மனித உரிமைச் சபைக்கு தெரிவித்துள்ளனர். ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை வரவேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இதனை குருமார்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும் அக்கடிதத்தில் சர்வதேச சுயாதீன விசாரணை தாமதமானாலும் தேவையானது என்று ஐ.நா. மனித உரிமைச் சபைக்கு புகழாரம் சூட்டியிருக்கிறார்கள்.

போரின் போதும், முன்னும், பின்னும் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், உள்நாட்டு, வெளிநாட்டு முன்னேற்றங்களை, அவர்களுக்கு இந்த விடயத்தில் உதவும் பொருட்டு,

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவி சடலமாக மீட்பு

பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நெடுந்தீவு பத்தாம் வட்டாரத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் - லக்சினி (வயது-12) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த மாணவி நேற்றுக் காலை கடைக்குச் சென்று நீண்ட நேரம் ஆகியும் திரும்பவில்லை. இந் நிலையில் குறித்த சிறுமி 10 ஆம் வட்டாரத்தில் கைவிடப்பட்ட வளவு ஒன்றில் தலையில் பலமாக அடித்து படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலும் இவரது சடலத்திற்கு அருகில் வெற்று மதுப்போத்தல்களும் சிறுமியின் உள்ளாடைகள் கிழித்தெறியப்பட்ட நிலையிலும் காணப்பட்டன. ஊர்காவற்றுறை நீதவான் நேற்றிரவு சடலத்தைப் பார்வையிட்டார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற அதேவேளை சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை என ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தேசிய மனித உரிமை ஆய்வறிக்கை விவாதத்திற்கு எடுக்க முன் தீர்மானமா?

### கண்டிக்கிறது அரசு

(ஜெனிவா)

இலங்கையின் அரசியலமைப்பு வரையறைக்குள் நிறுவப்பட்ட உள்ளகப் பொறிமுறையொன்றை ஐ.நா. மனித உரிமைச் சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முனைவது ஆபத்தான முன்னுதாரணமென்பதுடன், இவ்வாறு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதனை வன்மையாகக் கண்டிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை சபைக்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம் ஐ.நா.மனித உரிமை சபையில் மேற்கண்டவாறு தனது கண்டனத்தைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையினுடைய தேசிய மனித உரிமைகள் மேம்பாடுகள் குறித்தான ஆய்வறிக்கை சபையில் விவாதத்திற்கு எடுப்பதற்கு முன்னராகவே, தீர்மானமொன்றினைக் கொண்டுவருவதற்கு எத்தனிப்பது, ஐ.நா. மனித உரிமைச் சபையின் சரியான வழிமுறையல்ல இதனை வன்மையாக கண்டிக்கிறேன்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். நல்லிணக்க ஆணைக்குழுவின்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# பிறப்புப் பதிவுகளுக்காக அலையும் முல்லை மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையில் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு உள்ளிட்ட விபரங்களை தவற விட்டவர்கள் குறிப்பாக காணாமற்போன விபரங்களைப் பெற்றுக்கொள்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

தற்போது இம்மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் பல்வேறு அவசிய தேவைகளுக்காக விபரங்கள் தேவையாகவுள்ள நிலையில் இம்மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கே சென்று இவற்றைப் பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் பதிவுகளுக்கான இலக்கம், திகதி என்பவற்றைத் தொலைத்தவர்கள் செயலகத்திற்கு சென்று தமது விபரங்களைப் பெற்றுத்தருமாறு கேட்டால் அதற்கு 2 நாட்களின் பின்னர் உங்கள் பதிவு இல்லை எனவும் இலக்கம் இருந்தால் பார்க்கலாம் எனறும் கூறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சிலர் விபரங்களைப் பெறுவதற்கு கஷ்டத்தின் மத்தியில் கொழும்புக்குச் சென்று அங்கு அதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டாலும் அவர்களும் உங்கள் விபரங்களை முல்லைத்தீவு செயலகத்தினூடாக பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்தல் வழங்குவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் இம்மாவட்டத்தில் தரம் 1 முதல் 10 வரை கல்வி கற்ற மாணவி யுத்தத்தினால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தொலைந்ததையடுத்து அவர் தமது விபரத்தை முல்லைத்தீவு செயலகத்தினூடாக பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டும் பயனளிக்காத நிலையில் அம் மாணவி க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றமுடியாத நிலை ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகள் இதுவரை கணினிமயப் படுத்தப்படாத நிலை காணப்படுதாகவும், இதனால் பழைய விபரங்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவசியம் தேவையாகவுள்ள இவ்விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## சைக்கிள்களில் சுற்றித்திரியும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் யாழ். நகருக்கு பெருமளவில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இவ்வாறு வரும் உல்லாசப் பயணிகள் நகரின் உல்லாச விடுதிகளிலும் ஏனைய விடுதிகளிலும் தங்கியிருந்து நகரின் பல பகுதிகளையும் பார்வையிட்டு வருகின்றனர்.

சாதாரணமாக எமது மக்கள் போன்று சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், ஓட்டோக்களிலும் சென்று பல பகுதிகளையும் இவர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களும் பெருமளவில் தமது பகுதிகளுக்கு வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். இவர்களில் வெளிநாட்டவர்களை திருமணம் செய்தவர்களும் வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. (பா)

## குறியீட்டுக் கல் அகற்றப்பட்டது

(குருநகர்)

யாழ். முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள புல்லுக்குளத்தின் குறியீட்டு அடையாளம் சமீபகாலத்தில் அகற்றப்பட்டு காணப்படுகிறது. குளத்தின் தென்கிழக்கு மூலையில் காணப்பட்ட அடையாளம் அழிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் சிறிய திட்டியில் கோரைப்புற்கள் வளர்ந்து புல்லுக்குளம் என்னும் அடையாளத்தை பன்னெடுங்காலமாக சுட்டிக் காட்டி வந்தது.

கடந்த டிசம்பர் மாதத்தில் யாழ். மாநகர சபையால் குளத்தைப் புனரமைப்புச் செய்யும் பணிகளின்போது குறிப்பிட்ட மணல் திட்டும் நீக்கப்பட்டு புல்லுகளும் அழிக்கப்பட்டுள்ளதால் புல்லுக்குளம் தன்னுடைய அடையாளத்தை இழந்து போயுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (68)




## ‘தீம்தனனா’ நடன நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்திய துணைத் தூதரகமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பரத நடன நிகழ்வுகள் தீம்தனனா என்னும் பெயரில் இன்று மாலை 5.00 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன மாணவிகள் வழங்கவுள்ள இந்நடன நிகழ்வுகளுக்கான அணிசெய் கலைஞர்களாக நட்டுவாங்கத்தை திருமதி அகல்யா இராஜபாரதி, திருமதி சுதர்சினி கரண்சன் ஆகியோரும், குரலிசையை ஸ்ரீமதி சுகன்யா அரவிந்தன், திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரன் ஆகியோரும் வழங்கவுள்ளதுடன், மிருதங்க இசையை சி.துரைராசாவும், வயலின் இசையை அம்பலவாணர் ஜெயராமனும் வழங்குவர். (52)

## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம்

(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)

### கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும்


சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் கருகம்பனைக்கும் இடையில் கே.கே.எஸ். வீதி வழியாக பயணிக்கும்போது கறுப்பு நிற தோற்பை ஒன்று பெப்ரவரி முற்பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:- 0776132176 (C/1545)

## மாசி மக இலட்சார்ச்சனைப் பெருவிழா

தென்மராட்சி சாவகச்சேரி நகர் அருள்மிகு அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவளநாதர் சிவன் ஆலய மாசி மக இலட்சார்ச்சனைப் பெருவிழா இன்று ஆரம்பமாகி 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி மாசி மகத்தன்று இலட்சார்ச்சனை நிறைவு விழா இடம்பெறவுள்ளது. பாலகுருமணி கிரியா வித்துவஜோதி சிவப்பிரம்மஸ்ரீ க.பரராஜாசேகரக் குருக்கள் சிவப்பிரம்ம பூஷணம் சிவநெறிக் காவலர் பிரம்மஸ்ரீ செ.தெட்சணாமூர்த்திக் குருக்களின் தலைமையில் இப்பெருவிழா இடம்பெறவுள்ளது. (60)

## புதுக்குடியிருப்புக்கு மின்சாரம்



(புதுக்குடியிருப்பு)

வன்னிப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்ற புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மின்சார நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக புதுக்குடியிருப்பிலிருந்து விசுவமடு வரையான சாலையின் ஒருபக்கத்தில் வளர்ந்து நின்ற மரங்கள் அனைத்தும் தறிக்கப்பட்டு, மின்சாரக் கம்பங்கள் நடுவதற்கான முன்னாயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

சாலையில் நடைபெறும் வீதி அகலிப்பு வேலைகளோடு மேற்படி மின்சார விநியோகத்திற்கான வேலைகளும் ஆயத்தமாவதை மீள்குடியேறிய மக்கள் சந்தோஷத்துடன் வரவேற்றுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், இம்மாதம் 20 ஆம் திகதிக்குள் பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்புக்கு உயரழுத்த மின்சார விநியோகம் மேற்கொள்ளப் படவுள்ளதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (138)

## இன்று மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, யாழ். பிரதான வீதியில் பண்ணை முதல் பஸ்ரியன் சந்திவரையான பிரதேசம், பாஷையூர், குருநகர் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## சேதமாக்கப்படும் வீதி விளக்குகள்

(அனலைதீவு)

அனலைதீவு பிரதேசத்திலுள்ள வீதி விளக்குகள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டும், சூறையாடப்படுவதாகவும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார்.

மின் விளக்குகளை சேதமாக்குவது மற்றும் சூறையாடுவது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இனி இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவா மேலும் தெரிவித்துள்ளார். (85)

## விவசாயிகளைச் சந்திக்க ஏற்பாடு

(உரும்பிராய்)

ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் உரும்பிராய் மற்றும் ஊரெழுப் பகுதி விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து அவர்களின் தேவைகள் பற்றி கேட்டறிய ஏற்பாடு செய்துள்ளார்.

நாளை மாலை 4 மணிக்கு உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உரும்பிராய், ஊரெழுப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடி அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து தீர்வுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து விவசாயிகளையும் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைகளை முன்வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (120)

## பொற்பதி சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு

(கொக்குவில்)

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலைய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் - இ.பிரதீபன் (தீபன்), செயலாளர் - க.றஜீவன், பொருளாளர் - தெ.பிரதீப் (ஜீவன்), உப தலைவர்கள் - லயன் சு.விஜயகுமார், உபசெயலாளர் - சு.நடராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) உறுப்பினர்கள்-நர்.நித்தியானந்தன் (J.P, தலைவர் நல்லூர் பிரதேச மத்தியஸ்த சபை) பேராசிரியர் சு.பவானி (சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) சு.பரமேஸ்வரன் (செயலாளர், ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயம்) ஜி.அருட்செல்வன் (உத்தியோகத்தர் - நில அளவைத் திணைக்களம்) வ.பாலமுருகன் (விரிவுரையாளர் யாழ்.பல்கலைக் கழகம்) பொ.ஸ்ரீதத்தாத்ரிரேயநேசன்.

ஆற்றலைப் பெறவேண்டுமானால், மனதில் எப்போதும் ஆற்றலைப் பற்றிய எண்ணமே இருக்கவேண்டும். எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும். ஆற்றல் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். - அரவிந்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வாகனங்களைக் கட்டுப்படுத்த திட்டமிடுவோம்!

புற்றிலிருந்து ஈசல்கள் பெருகி வருவது போல, நமது தெருக்களில் பெருகி வரும் வாகனங்களின் தொகையைக் காண மலைப்பாக இருக்கிறது. போதாக்குறைக்கு லொறிகளிலும் கெண்டெய்னர்களிலும் ஏ–9 வீதியால் ஒவ்வொரு நாளும் ஏற்றி வந்துகொண்டிருக்கும் வாகனங்களைப் பார்த்தால், இவையும் ஓடுவதற்கு நம் வீதிகளில் இடமிருக்கிறதா என்ற கேள்வியே எழுகிறது.

யாழ். மாநகரில் மட்டும் என்றில்லை, நம் சிறுநகரங்களிலும் கிராமங்களிலும் கூட வாகன நெரிசலில் வீதிகள் மூச்சுத் திணறுகின்றன. குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள். ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருப்பது சர்வசாதாரணமாக உள்ளது.

வாகனங்களை இறக்கி விற்பனை செய்யும் நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டே இருக்கின்றன. வாகனம் வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் உதவி, அதனையும் மாதத் தவணைகளில் செலுத்துவது போன்ற வசதிகளை வாகன விற்பனையாளர்களே செய்து கொடுக்கின்றனர். இதன் காரணமாக மிகச்சுலபமாக வாகனங்களை வாங்கி உபயோகிக்கின்றனர் மக்கள்.

போக்குவரத்து நெரிசல் இயல்பு வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கிறது. குறிப்பாக பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் இப்போதே ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை. அங்கேயே ஆஸ்பத்திரி வளாகம் மேலும் விரிவாக்கப்படுவதோடு, சூழலில் ஹோட்டல்கள், கடைத் தொகுதிகளும் புதிதாக எழுப்பப்பட்டு வருகின்றன. அவசர உதவி வாகனங்கள்கூட சரியான நேரத்துக்கு மருத்துவமனைக்குச் செல்வது இன்றைய சூழலில் இயலாத ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில், யாழ் நகரத்துக்கூடாகவே ரயில் பாதையும் வந்துவிட்டால் நகரத்திற்குள் போக்குவரத்தில் ஏற்படப்போகும் தடங்கல்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் இப்போதே சிந்திக்க வேண்டும். முற்றிலும் புதிதாகவே போடப்பட வேண்டிய ரயில் பாதையை, முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் ஆஸ்பத்திரி, ஸ்ரான்லி வீதிப்பகுதிகளுக்குள் வராதவாறு, அரியாலையிலிருந்து செம்மணியூடாக காங்கேசன்துறை செல்வதாக அமைக்க முடியுமா என்று உரியவர்கள் யோசிப்பது நல்லது. யாழ்ப்பாண நகரம் இன்னும் விரிவடைய வேண்டும் என்பதை எதிர்பார்த்துத் திட்டமிடுவது சிறந்தது.

வாகனங்களின் நெரிசல் அதிகரிக்குமாயின், அதற்கு ஈடாக வீதி விபத்துகளும் பெருகும். இத்தகைய விபத்துகளில் பெரியவர்களை விட குழந்தைகளும், மாணவர்களும், இளைஞர்களுமே அதிகம் பலியாகின்றனர். உலக அளவில் மூன்று நிமிடத்துக்கு ஒருமுறை சராசரியாக இரண்டு குழந்தைகள் வீதம் வீதிவிபத்தில் உயிரிழப்பதாகக் கூறுகின்றனர். அடுத்த ஆண்டுக்குள் இந்த எண்ணிக்கை மேலும் இரண்டு மடங்காக உயரும் என்று கருதப்படுகிறது.

வாகனங்கள் பெருக எரிபொருள் தேவையும் அதிகரிக்கிறது. அரசாங்கம் பெட்ரோல், டீசல் விலையை அடிக்கடி உயர்த்திக் கொண்டே செல்கிறது. இதன் காரணமாக, அனைத்து விலைவாசியும் விஷம்போல் ஏறுகிறது. நாட்டுக்கும் எண்ணெய் இறக்குமதிச் செலவு அதிகரிக்கிறது. அன்னியச் செலாவணி இழக்கப்படுகிறது.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு வீதிகளைகளைத் திருத்தியும் அதிகரித்தும் பல்வேறு விதமான போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றினாலும், அதிகரித்து வரும் வாகனங்கள் காரணமாகப் போக்குவரத்து நெரிசல் சமாளிக்க முடியாத ஒன்றாக உள்ளது.

வீதியமைப்பு வசதிகளைப் பெருக்கும் அதேநேரத்தில் வாகனப் பெருக்கத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள வீதிகளைப் பயன்படுத்துவோருக்குக் கட்டணம் நிர்ணயித்தும், வாகனங்களை நிறுத்துவதற்கும் நேரத்துக்குத் தக்கபடி கட்டணம் நிர்ணயம் செய்யும் வெளிநாட்டு நடைமுறைகளை நாமும் பின்பற்றலாம்.

இதனால், சொந்தமாக வாகனங்கள் வைத்திருப்பவர்கள் பொது வாகனங்களைப் பயன்படுத்துகிற கட்டாயத்துக்குத் தள்ளப்படுவர். அதேசமயம், பொதுப் போக்குவரத்து வாகனங்களின் வசதியை நவீனப்படுத்தியும் விரிவுபடுத்தியும் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு இலகுவாக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் சொந்தமாக வாகனங்கள் வாங்குவதைக் குறைத்துக் கொள்வர். - ஆசிரியர்

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்றால் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயார்

## ஜெனிவாவில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(ஜெனிவா)

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு காலவரையறையுடன் செயற்படவுள்ளது. இந்தத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பு இணைந்து கொள்ள முன்வந்தால் அவர்களுடன் அரசு பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும். அதற்கு அரசு தயாராகவே உள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று ஜெனிவாவில் தெரிவித்தார்.

ஜெனிவாவுக்குச் சென்றுள்ள அரசாங்கத்தின் தூதுக்குழுவினர், புலம் பெயர்ந்த தமிழர்கள், ஜெனிவாவிலுள்ள தூதரகங்களின் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜெனிவாவில் நடைபெற்றபோது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சு வார்த்தையை அரசாங்கம் துண்டித்துக்கொண்டது ஏன்? என உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதியான சுரேன் சுரேந்திரன் கேள்வி எழுப்பியபோது , அரசியல் தீர்வு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அங்கத்தவர்களை நியமித்தவுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பதிலளித்தார்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கையிலிருந்து புறபபடுவதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் தான் கலந்துரையாடியதாகவும் அவர் கூறினார்.

இநதத் தெரிவுக்குழுவின் காலம் தொடர்பாகவும் நாம் கலந்துரையாடினோம். இது ஒரு கால வரையறையான முயற்சி. நாம் ஆறுமாதங்களில் அறிக்கை சமர்ப்பிப்போம் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# கோம்பாவிலில் தனியன் யானை குடிமனைக்குள் புகுந்ததால் பீதி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில் தனியனாகத் திரியும் யானையொன்றினால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் வாழவேண்டிய நிலைக்குள்ளாகி நிற்கின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்துமேலும் தெரியவருவதாவது, கடந்த வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் புதுக்குடியிருப்பு - கோம்பாவில் 2ஆம் வட்டாரத்தில் ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயிலுக்குப் பின்புறமாகவுள்ள மனைகளூடாக உட்புகுந்த யானையொன்று அங்குள்ள வேலிகளுக்குப் போடப்பட்டிருந்த முள்ளுக் கம்பிகளை அறுத்த வண்ணம் சென்றுள்ளது.

இநதப் பகுதியில் மீள்குடியேற்றம் செயயபபடட காலத்தில் நடமாடிய இந்த யானை மக்களின் சஞ்சாரத்தின் நிமித்தம் காட்டுக்குள்சென்று விட்டு, தற்போது மீண்டும் குடிமனைகளுக்குள் வரத் தொடங்கி விட்டதாக ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இந்தத் தனி யானையினால் இது வரை உயிர்ச் சேதம் ஏற்படாதபோதிலும், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த யானை குறித்து இரவு நேரங்களில் அச்சத்துடன் இருப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள மன்னாகண்டல் மற்றும் முத்தையன் கட்டு பெரிய காட்டுப் பிரதேசத்தை அண்டிய மேறகுப் பகுதிகளான புதுக்குடியிருப்பு - வேணாவில் உலகளந்த பிள்ளையார் கோவிலடி மற்றும் கைவேலிப் பகுதிகளில் மக்கள் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாததால் காடுகளில் இருந்து இந்த யானை ஊர் மனைகளுக்குள் ஊடறுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (138)

# பல்கலை மாணவிக்கு டெங்கு; சுறுசுறுப்பானது சுகாதார பிரிவு

(திருநெல்வேலி)

யாழ். பல்கலைக்கழக ஆனந்தகுமாரசுவாமி விடுதியில் உள்ள மாணவி ஒருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த மாணவி பதுளையைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி பதுளைக்கு சென்று மீண்டும் 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் திரும்பிய இவர் முகாமைத்துவக் கற்கை நெறியில் மூன்றாம் ஆண்டு மாணவியாவார்.

பல்கலைக்கழக விடுதியைச் சுற்றி நல்லூர் சுகாதாரப் பணிமனையினரால் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர ஆனந்தகுமார சுவாமி விடுதியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் விடுதியைச் சுற்றி தேங்கி நிற்பதாகவும் இதனை அகற்றுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினர் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பலராலும் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தேங்கி நிற்கும் இந்தக் கழிவு நீரிலிருந்து குடம்பிகள் பெருகி மீண்டும் புதிய புதிய டெங்கு நோயாளிகள் உருவாகுவதற்கு இதுமேலும் வழி வகுக்கும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சூழல் மாசடைவது பற்றி பலதடவைகள் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு நல்லூர் சுகாதாரப் பகுதியினராலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# தொடரும் சிற்றூழியர் பற்றாக்குறை மருத்துவ சேவையில் பெரும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர்களுக்கான தேவை தொடர்ந்தும் இருந்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளுக்குமான சிற்றூழியர்களின் தேவை அதிகம் ஏற்பட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

தற்சமயம் இங்கு 250 இற்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் நிரந்தமாகவும் சுமார் 110 வரையான சிற்றூழியர்கள் தற்காலிகமாகவும் கடமையாற்றி வருகின்றனர். இதுதவிர இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சென். ஜோன் அம்புலன்ஸ் படைத்தொண்டர்கள் உள்ளிட்ட 100 பேர் தொண்டர் அடிப்படையில் சேவையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் வைத்தியசாலையின் செயற்பாடுகள் விரிவு செய்யப்பட்டு வருவதும் நோயாளரின் தொகை அதிகரித்து வருவதும் சிற்றூழியர்களின் தேவையை அதிகரித்திருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


தற்போதைய சூழ்நிலையில் இந்த வைத்தியசாலையின் சிற்றூழியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு சிற்றூழியரின் எண்ணிக்கையை 500 ஆக அதிகரிக்க வேண்டிய தேவையும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தொண்டர் அடிப்படையில் சேவையாற்றி வருபவர்களிடத்தில் இருந்து முழுமையான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் வைத்தியசாலை கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு குறைவான கொடுப்பனவே (175 ரூபா) வழங்கப்படுகிறது. இதனால் அவர்களின் சேவையை உறுதியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் கண்காணிப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.(பா)

# கண்டாவளைப் பிரதேச அபிவிருத்தி துரிதகதியில் முன்னெடுக்கப்படுகிறது

## ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கிளிநொச்சி)

மீள்குடியேற்றத்தின் ஆரம்ப காலத்துடன் ஒப்பிடுகையில் இன்று கண்டாவளைப் பிரதேசம் கணிசமான முன்னேற்றத்தை எட்டியுள்ளது. மக்களிடையே வாழ்வியல் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில் இப்பிரதேசத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இவ் ஆண்டிலும் அபிவிருத்திப்பணிகளை துரித கதியில் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதிதலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி-கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதான வீதியான ஏ-35 வீதி, வைத்தியசாலை, பாடசாலைப் பொதுக் கட்டடங்கள், உள்ளிட்ட அடிப்படை உட்கட்டுமானப் பணிகளில் பெருமளவு அபிவிருத்திப் பணிகள் நடந்திருக்கின்றன, நடந்துகொண்டும் இருக்கின்றன. அத்தோடு பெருமளவானோருக்கு வாழ்வாதார உதவிகளும் கிடைத்திருக்கின்றன. இதனைவிட விவசாயம் நீர்ப்பாசனம் போன்றவற்றிலும் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இம்மாதம் 20 ஆம் திகதிக்குள் பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்புக்கு உயரழுத்த மின்சாரம் விநியோகமும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

உட்கட்டுமானம் உட்பட பௌதீக ரீதியிலான அபிவிருத்திகள் பெருமளவு நிதிச் செலவீட்டில் பல்வேறு திட்டங்களுக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை சமூக ரீதியான அபிவிருத்தியினையும் மேற்கொள்ள வேண்டும். அதற்கு மக்களிடம் கூட்டு சமூகபொறுப்பு மிக அவசியமானது. அப்போதுதான் இடம்பெறுகின்ற சில சமூக விரோதச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தி நாம் அனைவரும் எதிர்பார்க்கின்ற ஒரு நல்ல சமூகத்தை உருவாக்க முடியும். அதாவது மக்களிடம் இருக்கின்ற சமூக பொறுப்பும் விழிப்புணர்வும்தான் அவர்களை அனைத்துத் துறைகளிலும் முன்னோக்கிச் செல்ல வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

கண்டாவளைப் பிரதேச செயலர் சத்தியசீலன் தலைமையில் சுமார் ஐந்து மணித்தியாலயங்கள் இடம்பெற்ற கூட்டத்திற்கு கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் சிறீனிவாசன், கரைச்சி பிரதேச சபைத் தலைவர் குகராஜா, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள், ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## கூட்டுறவுப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுக் கல்லூரியினால் கூட்டுறவுப் பணியாளர்களின் உயர்தரப் பிரிவு, சாதாரண தரப் பிரிவுப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளரும், கூட்டுறவுக் கல்லூரி அதிபருமாகிய வே.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் உயர்தர பயிற்சி நெறி 10 மாதங்களாகவும், சாதாரண தரப் பயிற்சிநெறி ஐந்தரை மாதங்களாகவும் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மற்றும் வெளிவாரி மாணவர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் 2 ஆம் மாடியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எஸ்)


## வில்லுக்குளம் புனரமைப்பு தொடர்பாக பொறியியலாளர் குழு பார்வையிட்டது


(கொக்கிளாய்)

கொக்கிளாய் பகுதி விவசாயிகளின் நன்மைகளைக் கருத்திற்கொண்டு அப்பகுதியில் அமைந்துள்ள வில்லுக்குளம் புனரமைப்புச் செய்வதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விவசாய சேவைகளின் திணைக்களத்தின் உதவியோடு மேற்படி குளத்தின் கட்டுமானப் பணிகள் இடம்பெறவுள்ளன.

கடந்த வியாழக்கிழமை அன்று மேற்படி வில்லுக்குளத்தைப் புனரமைப்பதற்கான பணிகளை பொறியியலாளர் குழுவொன்று மேற்பார்வை செய்துள்ளது. இதற்கு மேற்பார்வையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட வகையில் வில்லுக்குளம் புனர்மைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குளம் புனரமைப்புச் செய்யப்படுவதால் அப்பகுதி மக்கள் தமது விவசாய நடவடிக்கைக்குத் தேவையான நீரைப் பெறுதல், மீன்பிடித் தொழிலை விருத்தி செய்தல் இலகுவானதாக அமையும் என அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (17)





யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொது கூட்டத்தின் போது ஓய்வுபெற்ற பணியாளர் ஒருவரைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பணியாளர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

## விலை குறைப்பு

(ஆனைக்கோட்டை)

நவாலி-ஆனைக்கோட்டைப் பகுதியில் கடந்த முதலாம் திகதி முதல் பனம் கள் விற்பனை 10 ரூபாவால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பனங்கள்ளுக்கான சீசன் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான விலை குறைவடைந்துள்ளதாகவும் இதுவரை ஒரு போத்தல் கள் 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது 40 ரூபாவாகக் குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## முல்லைத்தீவு – கொக்கிளாய் தனியார் பேருந்து சேவை விஸ்தரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து கொக்கிளாய் செல்லும் தனியார் பேருந்துகளின் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் இதுவரை இரண்டு சேவைகளாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

காலை 7 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கும் இச்சேவை இதுவரை இடம்பெற்றது.

இச்சேவை தற்போது மூன்று சேவையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காலை 7 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கும், மாலை 4 மணிக்கும் என இச்சேவை நேரம் குறிப்பிடப்படுகிறது.

மேலதிக தனியார் பேருந்தின் சேவையால் தமது போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (17)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணையம்பதி, வெள்ளாந்தெரு, நல்லதண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீ சாமுண்டாள் சமேத ஞானவைரவர் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழன் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்.நகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ சாமுண்டாள் சமேத ஞானவைரவர் சுவாமி அலங்கார உற்சவம் மாசி 11ஆம் திகதி ஆரம்பமாகி தினமும் மாலை அபிஷேகமும் விசேட பூசையும் நடைபெற்று வருகின்றன. இறுதி நாளன்று 108 சங்காபிஷேகத்துடன் மகேஸ்வரப் பூசையும் இடம்பெறும். (105)

## வீட்டுத்திட்டத் தெரிவில் குறைபாடு; பாலாவிபுர மக்கள் வீடின்றி அவதி



புத்தளம்-பாலாவி மல்லிகாபுரத்தில் வசிக்கும் அகதி முஸ்லிம் மக்கள் வீடின்றி அவலப்படுகின்றனர்.

இம்மக்களுக்குப் புத்தளத்தில் உலக வங்கி வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் மோசடி நடைபெற்றுள்ளதாக அங்குள்ள மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளார்கள்.

23 குடும்பங்கள் உலக வங்கியின் செயற்றிட்டத்திற்கமைய சகல தகுதிகள் இருந்தும் ஒருவரின் சதியினால் இக்குடும்பங்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இக்குடும்பங்களில் அனேகமானவர்கள் குடும்பத் தலைவரை இழந்தவர்கள், திருமண வயதை அடைந்த பருவப் பெண்கள், இரண்டு கால்களும் ஊனமான பல பெண் பிள்ளைகளின் தந்தை ஆகியோராவார்கள்.

இது சம்பந்தமாக புத்தளம் அரச அதிபர் அமைச்சர் றிசாட் பதியுதீன், உலக வங்கி வீடமைப்புத் திட்டப் பணிமனை, மனித உரிமைகள் ஆணைக்குழு, ஊடகங்களுக்கும் அவர்களால் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (105)



காரைநகர் கடற்பரப்பில் தரித்து நின்ற யுத்தக்கப்பலை பார்வையிடுவதற்கென காரைநகர் கடற்படையினரால் காரைநகர் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 50 மாணவர்கள் அழைத்துச்செல் லப்பட்டனர். இதில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், யாழ்ரன் கல்லூரி, வியாவில் சைவ வித்தியாசாலை, சுந்தர மூர்த்தி வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே கப்பலைப்பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர். அக்கப்பலைப் பர்வையிட்ட பின்னர் இறங்குதுறையில் மாணவர்கள் வந்து இறங்குவதனைப் படத்தில் காணலாம். [10]

# பரந்தன் சந்தியில் மாலைவேளை திருட்டு

(பரந்தன்)

பரந்தன் சந்தியில் நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் 5 வயதுச் சிறுமியிடம் அரைப்பவுண் சங்கிலிகளவாடப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, கிளிநொச்சி ஜெயந்திநகரைச் சேர்ந்த மரியானந்தன் தர்மலோகினி (வயது-28) என்பவர் தனது மகளான தேவதர்சா (வயது-5) என்பவருடன் பரந்தன் சந்தியில் இருந்து புளியம்பொக்கணை செல்வதற் காக பேருந்திற்காகக் காத்திருந்தார். அச்சமயம் யாழிலிருந்து முல்லைத்தீவிற்கு வந்துகொண்டிருந்த பேருந்தில் சன நெரிசல்களுக்கு மத்தியில் இவர்களும் ஏறியபோது பேருந்தின் வாசலருகில் சிறுமியின் கழுத்திலிருந்த சங்கிலியை நபர் ஒருவர் களவாடிவிட்டு பேருந்திற்குள் ஏறிச் சென்றுள்ளார்.

இதனை அடுத்து சிறுமிவீரிட்டுக்கத்தியதும் அதன் தாயார் விபரமறிந்து அங்கு நின்றவர்களிடம் கூறியதும், அவ்விடத்தில் பரபரப்பு ஏற்பட்டது. நடந்த விடயத்தை பேருந்து நடத்துநருடம் கேள்விப்பட்டு சிறுமியை பேருந்துக்குள் ஏறியவர்களை அடையாளம் காட்டும்படி கூறிய போது சிறுமி அதிர்ச்சியில அழுத வண்ணம் இருந்தார். இதன்பின் பரந்தன் சந்தி ஏ-9 சாலையில் நின்ற வீதிப்போக்கு வரத்துக் கணகாணிப்புப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுத் தீவிர விசாரணையும் பேருந்தினுள்தேடுதலும் நடத்தப்பட்டபோதும், திருடன் அகப்படவில்லை.

இதன் காரணமாக பேருந்துப்பயணமும் சிறிதுநேரம் தடைப்பட்ட நிலையில், இவ்வீதியூடாகப் பயணிக்கும் பேருந்துகளில் அடிக்கடி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பயணிகள் தெரிவித்துக்கொண்டனர். (04,138)

## முரசின் இன்றைய பலன்

(04.03.2012 –ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 21 ஆம் திகதி. ஏகாதசி முன்னிரவு 7.51 வரை.
நட்சத்திரம் புனர்பூசம். முன்னிரவு 9.34வரை. சித்தயோகம் ஏகாதசி விரதம்.
இராகுகாலம் 4.56 - 6.26 வரை. சுபநேரம் 9.26 - 10.56 வரை.
எமகண்டம் 12.26 - 1.56 வரை. குளிகைகாலம் 3.26 - 4.56 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அலைச்சல், புத்திரர்மேன்மை, சுபகாரியங்கள், சேமிப்பு உயரும். |
| ரிஷபம் | மறதி, பொன்பொருள் சேரும், ஆசைகள் நிறைவேறும், மனதில் புத்துணர்ச்சி. |
| மிதுனம் | மேன்மை, பிணைபோகாதே, சகோதரர் சச்சரவு, முயற்சியில் வெற்றி. |
| கடகம் | பயணம், வாழ்கையில்சச்சரவு, புத்திர பாக்கியம், வேலைவாய்ப்பு. |
| சிம்மம் | மாற்றங்கள், வீண்பழிநீங்கும், வேலை வாய்ப்பு, பயண அனுகூலம். |
| கன்னி | தயக்கம், உறவினர்விரிசல், வைத்தியச் செலவு, எதிர்பாராத இலாபம். |
| துலாம் | உறவினர சகாயம், வாக்குவாதம், அமைதியின்மை, எதிலும் மந்த நிலை. |
| விருச்சிகம் | பிரயாணம், பணியில் அவதானம், உறவினர் உதவுவார், முயற்சிகளில் வெற்றி. |
| தனுசு | சந்திராட்டமம்பதட்டம், தற்காப்பு எச்சரிக்கை, அந்நியர் உதவி, புதிய நண்பர்கள். |
| மகரம் | குடும்பசுகம், சகோதரவழியில் செலவு, பணப்புழக்கம், போக்குவரத்தில் கவனம். |
| கும்பம் | சுபசெய்தி, விரோதிகள் விலகுவார், தனவந்தர்கள் நட்பு, சொத்தில் சிக்கல். |
| மீனம் | நன்மை, பணத்தட்டுப்பாடு, வேலைப்பளு, தொழிலில் போட்டி. |

# மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோர்களின் உறுதுணை அவசியம்

## யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்வது எமது கரங்களிலேயே உள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வலி.கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின்(உதயன்) தெரிவித்துள்ளார்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் ஞா.அன்ரன் பிறேமதாஸ தலைமையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

பின்தங்கிய பிரதேசம் எனக் கூறப்படும் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் ஏனைய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளை விட கற்றல் செயற்பாடுகளில் அதிக இடர்பாடுகளை எதிர் கொள்கின்றன.

அவ்வாறான பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குரிய வளப்பற்றாக்குறையை நீக்குகின்ற பாரிய பொறுப்பு எமக்குள்ளது. அதனை கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன இணைந்து செயற் படுத்தி வருகின்றோம்.

அதேபோல இப் பாடசாலையின தேவைகளும் அதிகமாகவுள்ளது. வடக்கின் 1000 கோடி ரூபா அபிவிருத்தித் திட்டத்தில் இப்பாடசாலையின் சில தேவைகளை நிறைவேற்றுவதற்கான சில முயற்சிகளை மேற்கொள்வதுடன், பாடசாலைக்கான பல்லூடகக் கருவியொன்றை இவ்வாண்டுக்கான எனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே மாணவர்கள் கல்வியை சிறந்த முறையில் கற்பதனூடாக தமது எதிர்காலத்தை நல்ல வகையில் அமைத்துக்கொள்ள முடியும். பெற்றோர்கள் மாணவர்களுக்கு உறுதுணையாகச் செயற்படுவதன் மூலம் அவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்பாடடையச்செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக்கேடயங்களையும் வீர, வீராங்கனைகளுக்கான வெற்றிக் கிண்ணங்களையும நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அவர்களும் மாணவர்களுக்கான பரிசில்களை நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளும் வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளரும் வலி.கிழக்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஐங்கரன் யாழ்.வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி.கலாநாயகி சோதிதாசன உரும்பிராய் சென்மைக்கல் ஆலய பங்குத்தந்தை வண.பிதா யூட் நிக்ஷன், றோட்டறிக் கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் தயாபரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, றோட்டறிக்கழகத்தால் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலையின் மலசலகூடம், குளியலறைத் தொகுதியினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், றோட்டறிக் கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் தயாபரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகள் இல்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதான மத்திய பேருந்து நிலையத்தில் சுகாதாரவசதிகளற்ற பஸ்தரிப்பிடம் மற்றும் பயணிகள்தங்குமிட வசதிகள் இல்லாமையினால் பயணிகள் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதான மத்திய பேருந்து நிலையத்தில் மலசல கூடம் இல்லை. இதனால் வெளியிடத்தில் இருந்து வரும் பயணிகள் பெரும் சிரமமடைகின்றனர்.

மேலும் பருத்தித்துறை பிரதான பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு இட வசதியுமில்லை. இளைப்பாறும் இடமும் இல்லை இதனால் அருகில் உள்ள வேப்பமர நிழலில் இருந்து இளைப்பாறினாலும் பறவைகளின் எச்சங்கள் பயணிகளின் ஆடை, அணிகலன்களை அசிங்கப்படுத்துகின்றன.

எனவே பயணிகளின் முக்கிய பிரச்சினையாகவுள்ள மலசல கூடத்தினையும் அவர்கள தங்குமிடவசதிகளையும் செய்து தருமாறு சம்பந்தப்பட்டதரப்பினரை பயணிகள் கேட்டுக் கொள்கின்றனர். (116)

# மலரும் மொட்டுக்களின் மாலை நேர வகுப்புக்கள்

(சுன்னாகம்)

சுன்னாகம் தெற்கு கலைவாணி சனசமூக நிலையம் மலரும் மொட்டுக்களின் கல்வி வளர்ச்சியின் எதிர்கால ஏற்றம் கருதி மாலைநேர கல்வி வகுப்பு ஒன்றை இந்த மாதம் 1ஆம திகதி ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத்தலைவர் திருமதி சிவாஜினி சுரேஸ்குமார் தலைமையில் இம்மாதம் 1ஆம் திகதி மாலை நடைபெற்றது. இப் பகுதியைச் சேர்ந்த 11ஆம் ஆண்டிற்கு உட்பட்ட 50இற்கும் அதிகமான மாணவர்களும் மற்றும் பெற்றோர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இக்கல்வி வகுப்புக்களை நடாத்த கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையம் அனுசரணை வழங்கியுள்ளது. தற்போது இரண்டு ஆசிரியர்கள் கல்வி போதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (120)

# காதலருக்கு வீடு கொடுத்தவர் பொலிஸாரினால் கைது

(திருநெல்வேலி)

தான் உயிருக்கு உயிராகக் காதலித்த காதலன் தன்னை கைவிட்டுச் சென்றதினால் செய்வதறியாது மனமுடைந்த இளம் காதலி ஒருவர் இதுபற்றிப் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். இதனால் காதலனைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த 20வயது இளம் பெண்ணொருவரும் அதே ஊரைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும் காதலித்து வந்துள்ளனர். இதற்கு இளைஞனின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதனால் காதலன் காதலியை அழைத்துக்கொண்டு காரைநகரில் உள்ள வேறோரு வீட்டுக்கு சென்று இரகசியமாகத் தங்கியுள்ளார்.

பின்னர் காதலியை அந்த வீட்டிலேயே விட்டுவிட்டு காதலன் தலைமறைவாகிவிட்டார். பெற்று வளர்த்த பெற்றோரையும் பிரிந்துவந்து, கடைசியில் தான் உயிருக்குயிராக நேசித்த காதலனும் கைவிட்டுப் போனதால் மனமுடைந்துபோன காதலி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

விசாரணையை ஆரம்பித்த யாழ்.சிறுவர் மற்றும் பெண்கள் நல பொலிஸ் பிரிவு காதலர்கள் தஞ்சமடைவதற்கு வீடு கொடுத்த வீட்டு உரிமையாளரைக கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இவ் வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசா ரணைக்கு எடுத்துக் கெள்ளப் பட்ட போது இவரை 5000 ரூபா ரொக்கப்பிணையிலும், இரண்டு ஆள்பிணையிலும் செல்வதற்கு யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். வழக்கு மீண்டும் நாளை 05ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது. (137)



வெற்றிக் கிண்ணத்துடன் இரு அணித் தலைவர்களும்

போட்டியின் ஆட்டநாயகன்

சிறந்த துடுப்பாட்ட வீரர்

படங்கள் : தயாளபாலன்

# சமனிலையில் முடிவடைந்த இந்துக்களின் போர்

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும், யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஐந்தாவது இந்துக்களின் போர் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இரு கல்லூரி அணிகளுக்குமிடையிலான ஐந்தாவது இந்துக்களின் போர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மூன்று விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை யாழ். இந்துக் கல்லூரி அணி தொடர்ந்தது. இதில் நான்காவது, ஐந்தாவது விக்கெட்டை விரைவாக இழந்த, யாழ். இந்துக் கல்லூரி அணி நெருக்கடியானதொரு நிலையை அடைந்தது. இருப்பினும் ஆறாவது விக்கெட்டுக்காக ஜஸ்மினனுடன் இணைந்து அணித் தலைவர் கிரிசோபன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த ஜோடி எதிரணிப் பந்து வீச்சாளர்களுக்கு கடும் நெருக்கடியைக் கொடுத்து அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தது. இறுதியில் முதல் இனிங்ஸிற்காக யாழ். இந்துக் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ஜஸ்மினன் மிகச் சிறப்பான முறையில் சதம் பெற்றார். 156 பந்துகளை எதிர்கொண்ட அவர் மூன்று சிக்ஸர்கள், 14 பவுண்டரிகள் அடங்கலாக 127 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் அணித் தலைவர் 65, மதுசன் 64 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராகுலன் 62 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், பவிதரன் 72 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

43 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதல் இரண்டு விக்கெட்டுக்களையும் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் பறிகொடுத்தது. இந்த நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அணித் தலைவர் பங்குஜன் மற்றும் சிலோஜன் இணை அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தது. இருப்பினும் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பங்குஜன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சிலோஜனுடன் இணைந்த ராகுலன் சிறப்பான இணைப்பாட்டம் வழங்கி அணியை வலுவானதொரு ஓட்ட எண்ணிக்கைக்குள் கொண்டு சென்றார். இறுதியில் நேற்றைய இறுதி நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் 88 பந்துகளை எதிர்கொண்ட ராகுலன் இரண்டு சிக்ஸர்கள், 10 பவுண்டரிகள் அடங்கலாக 82 ஓட்டங்களையும், ஆதித்தன் 47, சிலோஜன் 44, திவாகர் 25, பங்குஜன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சிந்துஜன் 64 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், ருக்ஸ்மன் 74 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதன் மூலம் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜஸ்மினனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் தலைவர் பங்குஜனும், சிறந்த பந்து வீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த சிந்துஜனும், சிறந்த களத்தடுப்பாளராக யாழ். இந்துவின் சஜீகனும் தெரிவானார்கள். (93)



சிறந்த களத்தடுப்பாளர்



சிறந்த பந்து வீச்சாளர்

## சிறப்பான துடுப்பாட்டம் சமநிலைக்கு வழிவகுத்தது



(கொக்குவில்)

எமது வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் போட்டியை சமநிலைப்படுத்த முடிந்தது என யாழ். இந்துக் கல்லூரி அணித் தலைவர் ஜி. கிருசோபன் தெரிவித்தார்.

இந்துக்களின் போர் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமை குறித்து எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் இடம்பெற்ற போட்டியில் நாம் மிகவும் எதிர்பார்க்காத வகையில் தோல்வியைத் தழுவினோம். இருப்பினும், இந்த வருடம் எதிரணியின் மைதானத்தில் சிறப்பான முறையில் ஆடியமை மகிழ்ச்சி. அதிலும் ஜஸ்மினன் சதம் அடித்ததில் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தோம். நாம் இப்போட்டியில் திட்டமிட்டவாறு விளையாடிமையே எதிரணிக்கு நெருக்கடியை ஏற்படுத்த முடிந்ததுடன் போட்டி சிறப்பான முடிவு நோக்கிச் செல்வதற்கும் உதவியாக இருந்தது. ஒட்டுமொத்தத்தில் கடந்த முறையுடன் ஒப்பிடும்போது இப்போட்டியில் எதிரணிக்கு நாம் அதிக நெருக்கடி கொடுத்ததாகவே உணர்கின்றோம். இப்போட்டித் தொடரில் 300 ஓட்டங்களுக்கு மேல் பெற்றமை இதுவே முதல் முறையாகும். அந்த வகையில் இதுவும் மகிழ்ச்சிக்குரிய விடயமே. அடுத்த வருடம் இடம்பெறும் போட்டியில் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள முற்படுவோம் எனவும் அவர் தெரிவித்தார். (93)


## வியூகங்கள் பல வகுத்தும் போட்டியின் முடிவு ஏமாற்றம்

(கொக்குவில்)

நாம் நினைத்ததை விட போட்டியின் முடிவு எமக்கு ஏமாற்றத்தை அளித்தது. இருப்பினும், எதிரணியின் சிறப்பான ஆட்டத்திறனே போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடையக் காரணம் என கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் பி. பங்குஜன் தெரிவித்தார்.

இந்துக்களின் போர் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமை குறித்து எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் வலுவான மன நிலையிலேயே இப்போட்டியை எதிர்கொண்டோம். எங்கள் மைதானத்தில் முதல் வெற்றியைப் பதிவாக்கிய அணி என்ற சிறப்பையும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற நோக்கோடு பல வியூகங்களை நாம் அமைத்தோம். ஆனால், யாழ். இந்துக் கல்லூரி அணியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் அது தகர்ந்து விட்டது. குறிப்பாக ஜஸ்மினனின் ஆட்டமே போட்டியின் முடிவு இவ்வாறு அமைந்தமைக்கு முக்கிய காரணம். அவர் சதம் அடித்தமை மகிழ்ச்சி. நாங்கள் சிறப்பான ஆட்டத்தை



வெளிப்படுத்தினோம்.

இருப்பினும் வெற்றி கிடைக்கவில்லை. அடுத்த வருடம் இடம்பெறும் போட்டியில் இதே போன்று சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (93)



புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற இல்லமெய்வல்லுநர் போட்டியின் போது மாணவர்களின் அணி நடை நிகழ்ச்சியின் ஒருபகுதியைக் காணலாம். (138)

## "செமிக்" வெற்றிக் கிண்ணம் இன்று இறுதியாட்டம்

யாழ் கட்டளைப்படை தலைமையகம் நடாத்தும் 'செமிக்' வெற்றிக்கிண்ணம் ரி 20 இறுதியாட்டம் இன்று யா/சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கை கடற்படையணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் மோதவுள்ளது.

இந்தப் போட்டி மதியம் 1 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. யாழ் மாவட்டத்தின் 19 முனனணி கிரிக்கெட் அணிகள் மோதியுள் ளமை குறிப்படத்தக்கது. (எஸ்)

# சங்கானை கோட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

(சங்கானை)

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலையில் கரப்பந்தாட்டப் போட்டிகள் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மைதானத தில் இடம்பெற்றது.

**15 வயதுப் பிரிவு ஆண்கள்**

முதலாம் இடம் - அராலி சரஸ்வதி மகாவித்தியாயலம், இரண்டாமிடம் - சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, மூன்றாமிடம் - அராலி கிழக்கு அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை.

**17 வயதுப் பிரிவு ஆண்கள்**

முதலாமிடம் - சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, இரண்டாமிடம் - வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

**19 வயதுப்பிரிவு ஆண்கள்**

முதலாமிடம் - சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, இரண்டாமிடம் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

**15 வயதுப் பிரிவு பெண்கள்**

முதலாம் இடம் - சித்தங்கேணி சிறிகணேசா வித்தியாலயம், இரண்டாமிடம் - அராலி கிழக்கு அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, மூன்றாமிடம் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

**17 வயதுப்பிரிவு பெண்கள்**


முதலாமிடம் - வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி, இரண்டாமிடம் -சங்கானை சிவப் பிரகாச மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி.


**19 வயதுப்பிரிவு பெண்கள்**

முதலாமிடம் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், இரண்டாமிடம் -சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி.

(93)

விளையாட்டுச் செய்திகள்





சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி G.B.J.S. சந்திரசேகர மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளரும் பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளருமாகிய க.சண்முகலிங்கம் மாணவரொருவருக்குச் சம்பியன் கிண்ணம் வழங்கிக் கௌரவிப்பதையும் காணலாம். (11)

# கோட்ட வலயமட்ட விளையாட்டுக்கள்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட மட்டப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (93)

● ● ●

பருத்தித்துறைக் கல்விக்கோட்டப் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 8,9,10ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

● ● ●

கரவெட்டி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 8,9ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

● ● ●

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மட்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் 9,10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. 15,17,19 வயதுப் பிரிவு இரு பாலாருக்கும் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

# வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

(கோண்டாவில்)

யா/ கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர் நா.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன்(கமல்), விசேட விருந்தினராக பூ.குகதாசன் (உடற்கல்விப் பணிப்பாளர் ஆரம்பக் கல்வி, யாழ் கல்வி வலயம்) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் கலந்து கொள்ளவுள்ளார்.

# ராசி பலன் மார்ச் 1-15 வரை..

கணிப்பவர் பெருங்குளம் ராமகிருஷ்ணன MCA,MA(Ast)

## துலாம்:

(சித்திரை 3, 4, ஸ்வாதி, விசாகம் 1, 2, 3) யாரையும் எளிதில் நம்பிவிடாமல் ஆராய்ந்து பேசும் துலாம் ராசி வாசகர்களே, ராசியில் சனி, இரண்டாமிடத்தில் ராகு, ஐந்தாமிடத்தில் சூரியன், ஆறாமிடத்தில் புதன், ஏழாமிடத்தில் சந்திரன், குரு, ராசியாதிபதி சுக்கிரன், எட்டாமிடத்தில் கேது, லாபஸ்தானமான பதினொன்றில் செவ்வாய் என கோள்கள் நிலவுகின்றன. 12ஆம் திகதி பாக்கிய விரையஸ்தானாதிபதி புதன் கும்பத்திற்கும், 14ஆம் திகதி லாபாதிபதி சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

மூன்று ஆறுக்கு உடைய துர்ஸ்தானாதிபதி குருவின் பார்வை ராசியில் ஏற்படுகிறது. எனினும் சுகஸ்தானாதிபதி ராசியில் இருப்பதாலும் ராசியாதிபதி சுக்கிரன் ஏழில் இருப்பதாலும் வரவுக்கு ஏற்றவாறு செலவுகளும் தேடி வரும். ஆரோக்கியத்தில் கவனம் கொள்ளவேண்டும். சிலருக்கு நரம்பு சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்படலாம். தனாதிபதி செவ்வாய் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் லாபத்திற்கு பஞ்சமிருக்காது. எதிர்பார்த்திருந்த பண வரவுகள் தேடி வந்தடையும். ராகு கேதுவின் நிலையால் குடும்பத்தில் உள்ளவர்களுடன் சிறு சிறு மனத்தாங்கல்கள் ஏற்படலாம்.

மூன்றாம் வீட்டிற்குடையவர் மூன்றாம் வீட்டைப் பார்ப்பதால் உள்ளத்தில் மகிழ்ச்சி நிலைத்து இருக்கும். சகோதர சகோதரிகளுக்கு திருமணம் சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் கை கூடி வரும். மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரும். பிள்ளைகளுக்காக செலவுகள் செய்யவேண்டி வரும். வீடு, நிலம் வாங்குவதில் சிக்கல்கள் ஏற்படலாம். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். சென்ற நாட்களில் நடைபெறாத சில காரியங்கள் முக்கியஸ்தர்கள் மூலமாக இனிதே நிறைவேறும்.

உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய நண்பர்களோடு சேர்ந்து கூட்டுத் தொழில் செய்வீர்கள்.

கலைத்துறையினருக்கு சில வாய்ப்புகள் தவறக்கூடும். மாணவர்களுக்கு கல்வியில் மிகுந்த கவனம் தேவை.

**சந்திராஷ்டம் தினங்கள:** மார்ச் 01

**பரிகாரம்:** திருமகளை ஆராதியுங்கள். முன்னோர்களை தினமும் வழிபடுங்கள்.

## விருச்சிகம்:

(விசாகம் 4, அனுஷம், கேட்டை) எதிலும் நேர்படப் பேசும் விருச்சிக ராசி வாசகர்களே ராசியில் ராகு, நான்காமிடத்தில் சூரியன் ஐந்தாமிடத்தில் புதன், ஆறாமிடத்தில் சந்திரன், குரு, சுக்கிரன், ஏழாமிடத்தில் கேது, பத்தாமிடத்தில் செவ்வாய், பன்னிரெண்டாமிடத்தில் சனி என கிரக அமைப்பு உள்ளது. 12ஆம் திகதி புதன் கும்பத்திற்கும், 14ஆம் திகதி கர்மாதிபதி சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

ராசிநாதன் செவ்வாய் பத்தாமிடத்தில் அமர்ந்திருந்து ராசியைப் பார்க்கிறார். தனஸ்தானத்தை குரு பார்க்கிறார். எனவே தடைப்பட்டிருந்த காரியங்கள் அனைத்தும் இனிதே நடைபெறும். ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் அகலும். பொருள்வளம் சிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் தொடரும். தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். இனிமையாகப் பேசுவதில வல்லவரான நீங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

தன வாக்கு குடும்ப பூர்வ புண்ணியஸ்தானாதிபதி குரு குடும்ப ஸ்தானதைப் பார்ப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். நண்பர்கள் உறவினர்கள் மூலம் நல்ல செய்திகள் உங்களை வந்தடையும். பயணங்களால பயன் கிடைக்கும். வங்கிகளில் சேமிப்புகள் உயரும். விலையுயர்ந்த ஆடைகள ஆபரணங்களை வாங்குவீர்கள்.

ராசியாதிபதி பத்தில் இருப்பதால் தெய்வ காரியங்களில் கவனத்தைச் செலுத்து வீர்கள். பெற்றோரின் உடல்நிலை சீராக இருக்கும். உறவினர்களிடம உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும். நிலம் வீடு சம்பந்தமாக உள்ள முயற்சிகள் கைகூடும். பெண்களால் அனுகூலம் ஏற்படும். புதிய வேலை கிடைக்கும். வேலையில் உள்ளவர்களுக்கு நிரந்தமாகும். வியாபாரம் சிறப்பாக நடைபெறும்.

கலைத்துறையில் உள்ளவர்களுக்கு வாய்ப்புகள் வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைவார்கள்.

**சந்திராஷ்டம தினங்கள்:** மார்ச் 01, 02, 03

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமைகளில் அம்மன் தரிசனம் செய்யுங்கள்.

## தனுசு:

(மூலம், பூராடம், உத்திராடம் 1) எதிலும் தெய்வநம்பிக்கையுடன் போராடும் தனுசு ராசி வாசகர்களே மூன்றாமிடத்தில் சூரியன், நான்காமிடத்தில் புதன், பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சந்திரன், ராசிநாதன் குரு, சுக்கிரன், ஆறாமிடத்தில் கேது, ஒன்பதாமிடத்தில் செவ்வாய், பதினொன்றில் சனி, பன்னிரெண்டாமிடத்தில் ராகு என கிரகங்கள் பவனி வருகிறார்கள். 12ஆம் திகதி சப்தம கர்மாதிபதி புதன் கும்பத்திற்கும், 14ஆம் திகதி பாகியஸ்தானாதிபதி சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

ராசிநாதனின் பார்வை, தன குடும்பஸ்தானாதிபதியின் பார்வை என அனைத்து விதங்களிலும் நன்மைகளையே பெறும் காலகட்டத்தில் இருக்கிறீர்கள். சுப காரியங்களுக்கான வாய்ப்புகள் தேடி வரும். கொடுக்கல் வாங்கலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கண் சம்பந்தப்பட்ட உபாதைகள் வரலாம். கவனம் தேவை.

பாக்கியஸ்தானம் வலிமை பெறுவதால் தந்தையின் தொழில் வளம் பெருகும். குடும்பப் பிரச்சினைகளும் முடிவுக்கு வரும். வெளிவட்டாரப் பழக்கங் கள் நன்மையைத் தரும். நற்செய்திகள் உங்களைத் தேடி வரும். உடன்பிறப் புகள் அனைவரும் சந்தோஷமாக இருப்பார்கள். அவர்களுக்காக சில தியாகங்களையும் செய்வீர்கள்.

நான்குக்கு உடையவர் ஐந்தில் இருப்பதால் வீடு நில புலன்கள் உங்களை வந்தடையும். அதிலுள்ள பிரச்சினைகளும் தீரும். குழந்தைகளின் கல்வி, நடத்தை மிகவும் நன்றாக இருக்கும். ஐந்தில் குருவும், ஆறில் கேதுவும் இருப்பதால் பொன் பொருள் ஆபரண சேர்க்கை உண்டு. வியாபாரிகள் வெளிநாட்டு பயணம் செல்வார்கள்.

கலைத் துறையினர் அயல்நாடு செல்வார்கள். மாணவர்கள் போட்டிகளில் பரிசுகள் வாங்குவார்கள்.

**சந்திராஷ்டம தினங்கள்:** மார்ச் 04, 05, 06

**பரிகாரம்:** அனுமனை வணங்குங்கள். ஷஷ்டி தோறும் குமரனை வணங்குங்கள்.

(மிகுதி நாளைய தினமுரசில்)

# உட்கட்சி முரண்பாட்டைக் கைவிட்டு அரசியல் தீர்வுக்கு கூட்டமைப்பு முயலவேண்டும்



(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவும் பிளவுகளை ஒதுக்கிவிட்டு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அக்கட்சியை மீண்டும் வலியுறுத்துமாறு புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

**ஜெனிவாவுக்குச் சென்றுள்ள இலங்கை அரசாங்கத்தின் தூதுக் குழுவினர், புலம்பெயர்ந்த தமிழர்கள், ஜெனிவாவிலுள்ள தூதரகங்களின் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக் கிடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் நடை பெற்றபோது இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.**

அரசியல் தீர்வு செயன்முறை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளமை தென்படுவதாக வெளிவிவகார அமைச்சைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்தார்.

அரசியல் தீர்வு காண்பதற்கான த.தே.கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றும் அரசாங்கத் தூதுக்குழுவின் அங்கத்தவர்களில் ஒருவன் என்ற வகையில் அக்கட்சியில் பிளவுகள் உள்ளதை நான் அறிவேன். அரசியல் தீர்வு காண்பதற்காக செயற்படுவதில் ஒரு தரப்பு உண்மையான அக்கறை கொள்ளவில்லை. அத்தகைய தீர்வு தமது தேர்தல் நலன்களைப் பாதிக்கும் என அவர்கள் அஞ்சுகிறார்கள். இத்தகைய பேதங்களை ஒதுக்கிவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலியுறுத்துமாறு நான் உங்களிடம் கோருகிறேன் என சஜின் வாஸ் குணவர்தன கூறினார்.

உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதியொருவர் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை அரசாங்கம் துண்டித்துக்கொண்டது ஏன் என உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதியான சுரேன் சுரேந்திரன் கேள்வி எழுப்பினார்.

அரசியல் தீர்வு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அங்கத்தவர்களை நியமித்தவுடன் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பதிலளித்தார். இவ்விடயம் தொடர்பாக, இலங்கையிலிருந்து புறப்படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் தான் கலந்துரையாடியதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தாம் வரவேற்பதாக உலகத் தமிழர் பேரவை தெரிவித்தது.

நாம் அவ்வறிக்கையை வரவேற்கிறோம். அனைத்துவிடயத்திலும் உங்களை விமர்சிப்பதற்காக நாம் வரவில்லை. எனினும் நீங்கள் ஏன் அந்த இடைக்கால அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதில்லை என சுரேன சுரேந்திரன் கேள்வி எழுப்பினார்.




**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் செயலகத்திற்கு முன்னால் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை கொழும்பு - 02, தெவட்டகஹ ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்னால் ஜும்ஆ தொழுகையை அடுத்து ஆரம்பமான அக்கட்சியின் ஆர்ப்பாட்டத்தின் போது...**

# பிள்ளைகளுக்கு நஞ்சு கலந்த உணவு; தந்தைக்கு இப்போது சிறைவாசம்

(கொழும்பு)

தனது பிள்ளைகள் இருவருக்கு நஞ்சூட்டிய தந்தை ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திகன அலுவத்தைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதான ஒருவரையே இவ்வாறு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த நபர் ஐந்து வயதான தனது மகனுக்கும், 11 வயதான மகளுக்கும் உணவுடன் கலந்து நஞ்சூட்டியுள்ளார். அவர்கள் தற்போது பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரின் மனைவியும் ஆறு மாதங்களுக்கு முன்னதாக அரலி விதையை உண்டு உயிரிழந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து சந்தேக நபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் ரொஹான் ஜயவர்த்தன உத்தரவு பிறப்பித்தார்.

## இலஞ்சம் வாங்கிய பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

ஐயாயிரம் ரூபா இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் பேலியகொடை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் சார்ஜன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதுக்கையில் அளவுக்கு அதிகமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பரைக் கைப்பற்றிய குறித்த பொலிஸ் சார்ஜன்ட், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாதிருக்கவும், சாரதி அனுமதிப் பத்திரத்தை மீளக் கையளிக்கவும் ஐயாயிரம் ரூபா இலஞ்சம் கோரியுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறினார்.

களனி மேம்பாலம் பிரதேசத்தில் இலஞ்சத் தொகையைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் இந்தப் பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# அமெரிக்கா புலிகளுக்கு மீண்டும் ஊக்கமளிக்கிறது

## இது விமலின் சீற்றம்

(கொழும்பு)

புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளுக்கு தலைவராகச் செயற்பட்டுவரும் உருத்திரகுமாரனின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே, அமெரிக்கா செயற்பட்டு வருகின்றது என அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையில் புலிகளின் செயறபாட்டை ஊக்குவிக்கவே அமெரிக்கா முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையில் தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா விடுதலைப்புலிகளுக்கு சக்தியளித்து அதன் செயற்பாடுகளை இலங்கையில் ஊக்குவிக்க முயல்கிறது. அமெரிக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளின் தலைவராகச் செயற்பட்டுவரும் உருத்திரகுமாரனைக் கைது செய்யாமைக்கான காரணமென்ன எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

உருத்திரகுமாரனைக் கைது செய்யாது பாதுகாப்பதன் மூலம், புலிகளுக்கு சக்தியளித்து இலங்கையில் புலிகளின் செயற்பாட்டை மீண்டும் ஊக்குவிக்க முயல்கிறது என்பதும் தெளிவாகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது புலிகள், மனிதக் கேடயமாக வைத்திருந்த மூன்று இலட்சம் தமிழ் மக்களை, படையினர் மீட்டு பராமரித்து, பாதுகாப்பு அளித்தனர்.

இவ்வாறான செயற்பாட்டினைச் செய்தமைக்கே அமெரிக்கா இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் என்ற பிரேரணையை கொண்டு வந்துள்ளது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மேலும் லிபியா, சிரியா போன்று ஆசியாவுக்குள் ஏற்படுத்துவதற்கு இலங்கையைக் கேந்திரமாகப் பாவிப்பதற்கே அமெரிக்கா முற்படுகிறது. இலங்கையில் மன்னார், திருகோணமலையிலுள்ள எண்ணெய் வளங்களைச் சூறையாடுவதே அமெரிக்காவின் பிரதான இலக்காகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஆரையம்பதியில் ஆயுதமுனையில் கொள்ளை இராணுவச் சிப்பாய் உட்பட மூவர் கைது




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதியில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இராணுவ வீரர் உட்பட மூன்று பேர் காத்தான்குடி பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21ஆம் திகதி ஆரையம்பதியில் ஆயுதமுனையில் வீடொன்றில் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டன. இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனையின் பேரில் பொலிஸ் அதிகாரி எம்.பி.எம்.தாகாவின் தலைமையில் விசாரணை செய்து வந்த பொலிஸ் குழுவினர் இச்சந்தேக நபர்களை கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

இதில் இராணுவ வீரர் ஒருவரும் காத்தான்குடியைச் சேர்ந்த 2பேரும் கைது செய்யப்பட்டு அதில் ஒருவரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆரையம்பதி மற்றும் காத்தான்குடியைச்சேர்ந்த இன்னும் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரினால் தேடப்பட்டு வருவதாகவும் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இந்தச் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசுக்கு எதிரான போராட்டம் சூழ்ச்சி செய்பவர்களை மன்னிக்க முடியாது

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது கட்சி முன்னெடுக்கும் போராட்டத்திற்கு, கட்சியின் உள்ளிருந்து சூழ்ச்சி செய்பவர்களை கட்சியில் இருந்து விலக்குவதற்கு தாம் ஒரு போதும் பின்னிற்கப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பதுளை நகரத்தில் நேற்று மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சிக்குள் இருந்து இவ்வாறு செயற்படுபவர்கள் அரசாங்கத்திற்குத் தேவையான வகையிலேயே செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு செயற்படுபவர்களை கட்சியில் இருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



இதேவேளை, நுவரெலியாவிலும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுச் செயலாளர் திஸ்ச அத்தநாயக்க ஆகியோர் நிகழ்வொன்றில் கலந்து கொண்டனர்.

இதன்போது, சேதமாக்கப்பட்ட கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவைப் புனரமைப்பதற்கு நுவரெலியா மக்களும், கட்சியின் ஆதரவாளர்களும் நிதி வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொள்ளுப்பிட்டி கொலை வழக்கு உளவியல் அறிக்கை கோரப்பட்டுள்ளது



(கொழும்பு)

கொழும்பு-கொள்ளுப்பிட்டி ரேணுகா ஹோட்டலில் இடம் பெற்ற தமிழ்ப் பெண்ணின் படுகொலையுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் அவரது இரண்டாவது கணவரான சின்னத்துரை ஞானசந்திரன் தொடர்பில் உளவியல் நிபுணர்களின் அறிக்கையை நீதிமன்றம் கோரியுள்ளது. இரண்டாவது தடவையாகத் திருமணம் செய்து கொண்ட இந்தப் பெண், தனது கணவருடன் பிரித்தானியாவில் குடியேற விரும்பியதாகவும் இதற்குக் கணவன் மறுப்புத் தெரிவித்ததனையடுத்தே இவர்களுக்குள் பிரச்சினை எழுந்தமை தெரிய வருவதாகவும் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர் உளவியல் தாக்கத்திற்கு ஆளாகியிருக்கலாம் எனப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து, சந்தேக நபர் குறித்த உளவியல் நிபுணர்களின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் சந்தேக நபரை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டார்.

# இலங்கையில் தேசிய நல்லிணக்கம் அரசுக்கு கால அவகாசம் வேண்டும்

## ஜெனிவாவில் சீனப் பிரதிநிதி கோரிக்கை

(ஜெனிவா)

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைச் சிறந்த முறையில் முன்னெடுக்க வேண்டுமாயின் அதற்குப் போதிய அளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனறு சீனாவும் பாகிஸ்தானும் கோரிககை விடுத்துள்ளன.

வெளிச்சக்திகளால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படாமல் நல்லிணக்க செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கையை சுயாதீனமாக அனுமதிக்க வேண்டுமென சீனாவும் பாகிஸ்தானும் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் வலியுறுத்தியுள்ளன.

தேசிய நல்லிணக்க செயன்முறையை முன்னேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை தனது அரசாங்கம் பாராட்டுவதாக சீன தூதுவர் லியூ ஹென்மின் கூறினார். இலங்கையின் இணக்கப்பாட்டுடனேயே சர்வதேச உதவிகள் வழங்கப்பட வேணடும் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை உண்மையான நல்லிணக்க பொறிமுறையை உள்நாட்டில் செயற்படுத்துவதற்கு இலங்கைக்கும் தவையான அவகாசம் வழங்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் கூறியுள்ளது.

தென்னாபிரிக்கா, தாய்லாந்து, பொட்ஸ்வானா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் ஏற்கெனவே இலங்கையின் நல்லிணக்க செயன்முறை குறித்து இலங்கைக்கு சாதகமான கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா பயிற்சிநெறி

(வடமராட்சி)

வடமராட்சியில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட டிப்ளோமா கற்கை நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

2012 -2013 ஆண்டிற்கான முன்பள்ளி டிப்ளோமா கற்கைநெறி மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளதால் க.பொ.த. சாதாரணதரம் சித்தியடைந்த முன்பள்ளி ஆசிரியர் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

வடமராட்சி முன்பள்ளி உதவிக் கலவிப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு தமது விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணமாக்கி சமர்ப்பிக்கலாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் அறிவித்துள்ளார். (116)

## கூட்டமைப்பு ஜெனிவா செல்வதை அரசு ஒருபோதும் தடுக்கவில்லை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனோ, அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ ஜெனிவா செல்வதை அரசாங்கம் தடுக்கவில்லை. போவதும் போகாமலிருப்பதும் அவர்களைப் பொறுத்த விடயமெனத் தெரிவித்த பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, ஜனநாயக நாட்டில் யாருடைய உரிமையையும் அரசு பறிக்க முற்படாது எனவும் குறிப்பிட்டார்.

முதலில் அவர்கள் போகப் போதில்லை என முடிவு செய்திருந்தனர். இப்போது அவர்கள் போக விரும்புவதாக ஊடகவியலாளர்களான நீங்கள் தான் கூறுகின்றீர்கள்.

தமிழ்க் கூட்டமைப்பினர் ஜெனிவாவுக்குப் போக விரும்பினால் தாராளமாகப் போகலாம் அதனை அரசு ஒருபோதும் தடுக்கப் போவதில்லை. அவர்கள் தரப்பில் ஏதும் தெரிவிக்க விரும்பினால் அதனை அரசால் தடை செய்ய முடியாது.

ஆனால் யார் எங்கு போய்ப் பேசினாலும் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியவர்கள் நாங்கள்தான். அதுவும் உள் நாட்டில் தான் தீர்வு எட்டப்பட வேண்டுமென்பதை எவரும் மறந்து விடக்கூடாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிலர் ஜெனிவா செல்ல எண்ணியுளளமை தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேறகண்டவாறு பதிலளித்தார்.

## பழைய இரும்பு எடுத்துச் செல்லத் தடை; வியாபாரிகள் பலருக்கு கடும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பழைய இரும்புகள் தென் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் போது அவை ஆனையி றவு சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்படுவதாக யாழ். இரும்பு வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். நிஸாம் தெரிவித்தார்.

பலவருட போராட்டத்தின் பின்னர் கடந்த வருடம் முடங்கிக்கிடந்த பழைய இரும்புகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தது.

இதனால் வீதிகள் எங்கும் தேங்கிக் கிடந்த பழைய இரும்புகள் அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டு தற்போது இரும்புகளின் இருப்புக் குறைந்துள்ளன.

யாழ். மாநகராட்சியின் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பின்னர் தற்போது வீதிகள் யாவும் சீரடைந்துள்ளன.

தற்போது இரும்புகளை ஏற்றிச் செல்லும் லொறிகள் ஆனையிறவு பரிசோதனை முகாமில் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுவதாக இரும்பு வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். நிஸாம் கூறுகின்றார்.

இவ்வாறு திரும்பி வருவதால் வியாபாரிகளுக்கு பெரும் நஷ்டமும், பாதிப்பும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தொழிலின்றித் தவிப்பதாகவும் தெரிவித்தார். (105)

## மன்னார் தீ விபத்தின் பின்னணி? காரணம் கண்டறிய உத்தரவு

மன்னார் தினச் சந்தையில் இடம்பெற்ற தீ விபத்தின் பின்னணி குறித்து கண்டறியுமாறு வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவாவிலுள்ள அமைச்சர் றிசாட பதியுதீன் பொலிஸ் மா அதிபரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இச்சந்தையினை நம்பி வாழ்ந்த சுமார் 300 குடும்பங்கள் தற்போது செய்வதறியாது தவித்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் குறித்த தீ விபத்தின் பின்னணி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என அமைச்சர் றிசாட், பொலிஸ் மா அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையினைக் குழப்பி மீண்டும் கலவரமானதொரு சூழலை ஏற்படுத்தே இவ்வாறான சில சம்பவங்கள் தொடர்ந்து சில சக்திகளினால் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் பொலிஸ் மா அதிபரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பயிற்சிகளில் இணையலாம்

(வடமராட்சி)

வடமராட்சி - வதிரி வடக்கு மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் பெண்களுக்கான விசேட தொழிற் பயிற்சி நடாத்தப்பட்டு வருகிறது.

பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கென நடத்தப்பட்டு வரும் இப் பயிற்சித் திட்டத்தில் முக ஒப்பனை, சிகை அலங்காரம் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

விரும்பியவர்கள் இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (116)

## வீதி அகலிப்புப் பணிகள் யாழ். நகரிலும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலிருந்து ஏ-9 வீதி அகலிப்பிற்கென சிறிலங்கா ரெலிக்கொம் பரிவர்த்தனைக் கம்பங்கள் வீதியோரமாக பின்னகர்த்தப்படும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வீதியில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த பழைய கம்பங்களுக்குப் பதிலாக புதிய கம்பங்களும் ரெலிகொம்மால் பொருத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை இவ்வீதியில் அமைந்திருக்கும் பாலங்களும் புனரமைக்கப்பட்டு வருவதுடன் இவ்வீதியின் இருமருங்கிலும் குடியிருப்பாளர்கள் வீதிக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய காணி மற்றும் உடைக்கப்பட வேண்டிய மதில்கள், கட்டடங்கள் குறித்து யாழ். பிரதேச செயலர் மற்றும் கிராம அலுவலர் தலைமையிலான குழு ஒன்று நேற்றுக் குறித்த பகுதிக்கு விஜயம் செய்து பொது மக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றது. (பா)

## அமெரிக்கப் படைகள் இலங்கையில் இல்லை

இலங்கையில் அமெரிக்க சிறப்புப் படைகள் இருப்பதாக வெளியான தகவல்களை இலங்கை இராணுவம் மறுத்துள்ளது. அமெரிக்காவினதோ வேறெந்த வெளிநாட்டினதோ துருப்புகள் தற்போது இலங்கையில் இல்லை என இராணுவப் பேச்சளார் நிஹால் ஹப்பு ஆரச்சி கூறினார்.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளில் பயங்கரவாத ஒழிப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக அமெரிக்க சிறப்புப் படைகள் நிலைகொண்டிருப்பதா்க அமெரிக்காவின் பெண்டகன் உயரதிகாரி அட்மிரல் ரொபர்ட் வில்லார்ட் அமெரிக்கா நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள வருடாந்த "நீர்ககாக தாக்குதல" எனும் பெயரிலான கடல், ஆகாய, தரை பயிறசிகளில் இலங்கையின் 2500 துருப்புகளுடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக 8 பேர் கொண்ட அணிகளை அனுப்புமாறு நான்கு நாடுகளுக்கு இலங்கை இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.




## வன்னி இறுதிக்கட்ட யுத்த வலயத்தில் மருத்துவ சேவைக்கு அனுமதி கிடைக்கவில்லை

### கோத்தாபயவின் கூற்றுக்கு பதிலடி

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தகாலத்தில் வன்னியில் மருத்துவ சேவை வழங்க எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அக்காலப் பகுதியில் எமது பணியாளர்கள் எவரும வன்னியில் தங்கியிருக்கவில்லை என்றும் எல்லைகளறற மருத்துவ சேவை அமைப்பு அறிவித்துள்ளது.

பிரான்சைத் தளமாகக் கொணட "எலலைகளறற மருத்துவரகள் அமைப்பானது" [Médecins Sans Frontières - MSF] 2009 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், இலங்கையின் யுத்த வலயப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்ததாக குறிப்பிடப்படும் ஒரு நேர்காணல் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

இந்திய ஊடகமொன்றில் பெப்ரவரி 06 அன்று வெளியாகிய நேர்காணல் ஒன்றில், யுத் தம் இடம்பெற்ற வலயங்களில் போர் உக்கிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் பண்புரிந்ததாக பாதுகாப்புச் செயலர் எம். கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்த கருத்தை MSF ஏற்க மறுத்துள்ளது.

பிரான்சின் MSF, இந்திய மருத்துவக் குழு உள்ளடங்கலான பல அனைத்துலக அமைபபுக்கள் யுத்த வலயத்தில் சரணடைந்த ஆயுதக் குழுவினருக்கும், யுத்தத்திலிருந்து உயிர் தப்பிய பொதுமக்களுக்கும் சேவையை வழங்குவதற்காக யுத்த வலயத்தில் தங்கியிருந்தனர் என கோத்தாபய தெரிவித்துள்ளார் என ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

வடபகுதியில் யுததமானது தீவிரம் பெற்றிருந்த செப்ரெம்பர் 2008 இல், கிளி நொச்சியில் பணிபுரிந்து கொண்டிருந்த அனைத்து அனைத்துலக அமைப்புக்களுடன் MSF உம் அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு இலங்கை அரசாங்கத்தால் கட்டளையிடப் பட்டிருநதது.

மே 2009 இல் யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னரே, யுத்தத் திலிருந்து உயிர் தப்பிய பொது மக்களுக்கான மருத்துவ சேவைகளை வவுனியா வடக்கில் வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

யுத்த வலயத்திற்கு வெளியே அமைந்திருந்த ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்தே MSF தனது சேவையை வழங்கியது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



# வேர்ட் துளிகள்




**வெட்டிச் செதுக்கிய எழுத்துக்கள்:**

வேர்ட் டொகுமெண்ட்டில், எழுத்துக்களைச் செதுக்கி ஒட்டி வைத்தவை போல தோற்றம் அளிக்கும்படி செய்திடலாம். ஆங்கிலத்தில் இதனை "Embossing" என அழைக்கின்றனர். ஓர் எழுத்தினை Emboss செய்திடுகையில், அது பக்கத்திலிருந்து தூக்கி எடுக்கப்பட்டு, ஓரங்களில் நிழலோடு வைக்கப்பட்டது போலக் காட்சி அளிக்கும். இவ்வாறு அமைக்கக் கீழ்க்காணும் வழிகளைப் பின்பற்றவும்.

1. எந்த எழுத்துக்களை அலலது சொல்லை Emboss செய்திட வேண்டுமோ, அவற்றை தேர்ந்தெடுக்கவும்.
2. Format மெனுவிலிருந்து Font என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.
3. இதில் உள்ள "emboss" என்பதில் டிக் அடையாளம் இருப்பதனை உறுதிப்படுத்தவும்.
4. ஓகே கிளிக் செய்திடவும்.
5. இதனை அமைக்கையில், வெவ்வேறு வண்ணங்களில் அந்த எழுத்துக்கள், அவற் றின் பின்னணி தோன்றும் வகையில் அமைக்க வசதிகள் தரப்பட்டுள்ளன.

**பந்தியை நகர்த்த:**

சில வேளைகளில் நாம் உருவாக்கும் வேர்ட் டொகுமெண்ட்டில் ஏதேனும் ஒரு முழு பந்தியை டொகுமெண்ட்டின் வேறு இடத்தில் அமைக்க விரும்புவோம். இதற்கு கொப்பி அல்லது கட் மற்றும் பேஸ்ட் கட்டளை எல்லாம் வேண்டாம். எந்த பந்தியை நகர்த்த வேண்டுமோ அதனுள்ளாக கேர்சரைக் கொண்டு சென்று வைக்கவும். பின் Shift மற்றும் யுடவ கீகளை அழுத்தியவாறு Up அரோ அல்லது Down அரோவினை அழுத்தினால் பந்தி மேலே கீழே முழுதாகச் செல்லும்.

**Format செய்ததை மொத்தமாக நீக்க:**

வேர்ட் டெக்ஸ்ட்டில் சில குறிப்பிட்ட சொற்களை மற்ற சொற்களிடமிருந்து வேறுபடுத்திக் காடட அழுத்தமாக, அடிக்கோடு, சாய்வு மற்றும் வேறு சில போர்மட்களில் அவற்றை அமைத்திருப்போம். அமைத்த பின்னர், இந்த போர்மட்டிங் தேவை இல்லை என எண்ணினால், இவற்றை மொத்தமாக நீக்க வேண்டுமென்றால், இதனைத் தேர்வு செய்து மெனு பார் சென்று ஒவ்வொரு ஐகொ னாகக் கிளிக் செய்வோம். இதற்குப் பதிலாக இரண்டு Short Cut கீகளைப் பயன்படுத்தலாம். போர்மட்டிங் நீக்கி எளிமையான டெக்ஸ்ட் மட்டுமே தேவைப்படும் சொற்களைத் தேர்வு செய்து கொள்ளுங்கள். பின் Ctrl+Shft+Z அழுதது்ங்கள். மொத்தமாக போர்மட்டிங் அனைத தும் நீக்கப்படும். இதனை Ctrl+Space Bar அழுத்தியும் மேற்கொள்ளலாம்.

இதே போல ஏதேனும் பந்தி போர்மட்டிங் செய்திருந்தால், அந்த போர்மட்டினை நீக்க பந்தியினை செலக்ட் செய்து Ctrl+Q அழுத்துங்கள். டெக்ஸ்ட் ஒன்றுக்கு சாதாரண Normal Style இருந்தால் போதும் என்று எண்ணினால், உடனே அதனைத் தேர்ந்தெடுத்து Ctrl+Shft+N அழுத்தவும்.

# ட்ரைவில் போட்டால் சிடி சுழன்றுகொண்டே இருக்கிறதா?




நமது முக்கியமான டேட்டா பைல்கள் பலவற்றை சிடிக்களில் Backup எடுத்து வைத்திருப்போம். வெகுநாட்கள் கெடாமல் இருக்கும் எனறு சிடிக்களை றாககைகளில் அடுக்கி வைத்திருப்போம். தேவை வரும்போது, எடுத்து கம்ப்யூட்டரில் சிடி ட்ரைவில் போட்டால், வெகு நேரம் சுழன்றுவிட்டு, கடைசியில் படிக்க இயலவில்லை என்று செய்தி கிடைக்கும். சில வேளைகளில் பாதிவரை சென்றும் பைல்களைத் திறக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். நொந்து போவோம்.

பல காரணங்களால் இந்த நிலை தோன்றலாம். ஈரப்பதம் காரணமாக பூஞ்சணம் பிடித்து இயங்கா நிலை ஏற்படலாம். அல்லது காலப் போக்கில் அவற்றைக் கையாள்கையில் தேய்ந்து, கீறல் விழுந்து கெட்டுப் போகும் வாய்ப்பும் உண்டு. இத்தகைய சிடிக்களைப் படித்து அறிந்து பைல்களைப் பெற இலவச புரோகிராம் ஒன்று இணையத்தில் கிடைக்கிறது. இதன் பெயர் CDCheck. இது சில நொடிகளில் உங்கள் சிடி அல்லது டிவிடியில் கெட்டுப் போன பைல்களை அடையாளம் காட்டுகிறது. அதில் உள்ள டேட்டாவினை மீட்க முடியுமா என்றும் காட்டுகிறது. பின்னர் அவற்றை மீட்டு ஹார்ட் டிஸ்க்கில் பதிந்து தருகிறது. இதைப் பெறக் கீழ்க் காணும் இணைய தளங்களை அணுகவும்.


http://download.cnet.com/CDCheck/30002086_410339637.html

http://www.freecodecs.com/download/ cdcheck.htm

# டாஸ்க் பாரில் இணைய இணைப்பு ஐகொன்

டாஸ்க் பாரில் இணைய இணைப்பில் இருப்பதைக் காட்டும் ஐகொன் சிலசமயம் காணப்படாது போய்விடும். Browser களை மாற்றுவதால் இப்படி ஏற்படலாம். டாஸ்க் பாரில் அந்த ஐகொனைக் கொண்டுவர பின்வருமாறு செய்யவும்.

ஸ்டார்ட் (Start) கிளிக் செய்திடுங்கள். Settings பிரிவு செல்லுங்கள். அதில் Control Panel தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் Control Panel கட்டத்தில் காட்டப்படும் ஐகொன்களில், Network Connections என்று உலக உருண்டை படத்துடன் உள்ள ஐகொனில் கிளிக் செய்திடுங்கள்.




இப்போது நீங்கள் உங்கள் சிஸ்டத்தில் செட செய்த, இன்டர்நெட் உப்பட அனைதது நெட்வேர்க் இணைப்புகளுக்கான ஐகொன்கள் காட்டப்படும். உங்களின் இன்டர்நெட் இணைப்பு ஐகொனைத் தேர்ந்தெடுங்கள். இதில் ரைட் கிளிக் செய்து கிடைக்கும் விண்டோவில் General டேபினைத் தேர்ந்தெடுக்கவும். இதில் "Show icon in notification area when connected" என்ற வரியில் உள்ள சிறிய பொக்ஸில், டிக் அடையாளத்தினை ஏற்படுத்தி, பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும். இனி நோட்டிபிகேஷன் ஏரியாவில், ஐகொன் காட்டப்படும்.

இன்டர்நெட் ஐகொன் காட்டப்படாததனால், இணைய இணைப்பு கிடைக்காது என்று எண்ண வேண்டாம். அதே போல இணைய இணைப்பின் வேகம் அறிய, Free Internet Speed Test என்று ஏதேனும் ஒரு சேர்ச் இஞ்சினில் கொடுத்துக் கிடைக்கும் தளங்களின் மூலம், இணைய இணைப்பு வேகத்தை அறியலாம்.




சமூக இணைய தளங்கள் செயற்பாட்டில் முதல் இடம் பிடித்துள்ள பேஸ்புக் தளத்தின் பயனாளர் எண்ணிக்கை 100 கோடியை எட்டும் என ஐ-குரொசிங் என்ற நிறுவனம் அறிவித்துள்ளது. சென்ற ஆண்டு பேஸ்புக் பயனாளர் எண்ணிக்கை 80 கோடியாக இருந்தது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில், இந்த தளத்தின் பயன்பாடு சீராக உயர்ந்து வருவதன் காரணமாக இந்த எண்ணிக்கையினை பேஸ்புக் எட்டும என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதற்கேற்ற வகையில் பல புதிய வசதிகளை பேஸ்புக் தன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. குறிப்பாக, நண்பர்களிடையே ஓடியோ மற்றும் வீடியோ பைல்களைப் பகிர்ந்து கொள்ளும் வசதி அனைவரையும் கவர்ந்துள்ளது.


பேஸ்புக் சமூக தளத்திற்குப் போட்டியாக, கூகுள் நிறுவனம் அமைத்த கூகுள் ப்ளஸ் தளம் நாளொன்றுக்கு 6 இலட்சத்து 25 ஆயிரம் புதிய வாடிக்கையாளர்களைப் பெற்று வருகிறது. இந்த ஆண்டின் இறுதியில் இந்த எண்ணிக்கை 40 கோடியை எட்டும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

# விண்டோஸ் 7 Backup

நாம் கம்ப்யூட்டரில் அமைத்திடும் டேட்டா பைல்களை பாதுகாத்து பதிப்பது அவற்றைக் காப்பாற்றும் சிறந்த வேலை ஆகும். இதற்கெனவே, விண்டோஸ் 7 சிஸ்டம் ஒரு தனி வசதியினை அளித்துள்ளது. இதனை Backup and Restore என அழைக்கின்றனர். இநத வசதியினைப் பயன்படுத்துவது குறித்துக் காணலாம்.

முதலில் சிஸ்டத்தில் உள்ள இந்த . Backup and Restore வசதியினை இயக்கவேண்டும். இதனை Control Panel பகுதியில் System and Security என்பதைக் கிளிக் செய்து பெறலாம். Backup and Restore என்ற இந்த வசதியினை இதற்கு முன்னர் நீங்கள் பயன்படுத்தவில்லை எனில், 'Backup' என்பதன் கீழாக 'Windows Backup has not been set up' என்ற ஒரு செய்தி தரப்படும். இந்த செய்தியின் வலது புறமாக உள்ள Set up backup என்ற லிங்க்கின் மீது கிளிக் செய்திட வேண்டும். இந்த புரோகிராம் தொடங்கியவுடன், உங்கள் Backup பைல்களை எந்த இடத்தில் சேவ் செய்திட வேண்டும் என்ற Option கேட்கப்படும். உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள முதன்மை ஹார்ட் ட்ரைவினை Backup ட்ரைவாக தேர்ந்தெடுக்க, விண்டோஸ் சிஸ்டம் இடம் தராது. எக்ஸ்டேர்னல் ட்ரைவ் ஒன்றினை கம்ப்யூட்டரில் இணைத்து Refresh என்பதில் கிளிக் செய்திடவும்.

இந்த வகையில் Backup பைல்கள் பதியப்பட வேண்டிய ட்ரைவினைத் தேர்ந்தெடுத்து செட் செய்த பின்னர், எந்த பைல்களை Backup செய்திட வேண்டும் என கம்ப்யூட்டர் உங்களைக் கேடகும். நீங்கள் எதனையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை எனில், விண்டோஸ் தானாக, ஹார்ட் ட்ரைவின் இமேஜ் பைல ஒன்றை Backup பைலாக உருவாக்கும். அல்லது, இதற்குப் பதிலாக, Let me choose என்ற பட்டனில் கிளிக் செய்து,






நீங்கள் Backup செய்திட விரும்பும் பைல்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

எந்த ட்ரைவில் பதிய வேண்டும் என பதனையும், எந்த வகை பைல்களை Backup செய்திட வேண்டும் என்பதனையும் தேர்ந்தெடுத்த பின்னர், சிஸ்டம் உங்களுக்கு Backup ஆக இருக்கும் பைல்களின் தொகுப்பு திரை ஒன்றைக் காட்டி உறுதி செய்திட கேட்கும். Backup செயற்பாடு தொடங்கும் முன்னர், விண்டோஸ் இந்த செயற்பாட்டினை மேற்கொள்ளத்தான் அமைத்துளள கால நேரத்தினைக் காட்டும். அந்த நேரத்தில் கம்ப்யூட்டர் இயக்க நிலையில் இருப்பதனை உறுதி செய்திடவே இந்த கேள்வி. இதில் மாற்றம் தேவை என நீங்கள் கருதினால், Change schedule என்பதில் கிளிக் செய்து, உங்களுக்கு வசதியான நேரத்தினை அமைக்கவும். இறுதியாக Save settings கிளிக் செய்து Backup செயற்பாட்டினை இயக்கவும்.

முதல்முதலாக Backup எடுக்கையில், சிறிது கூடுதலாகவே நேரம் எடுத்துக் கொள்ளப்படும். இதனை அடுத்து எடுக்கப்படும் Backup செயற்பாட்டிற்குக் குறைந்த அளவிலேயே நேரம் எடுத்துக் கொள்ளப்படும். ஏனென்றால், அடுத்தடுத்து Backup எடுக்கப்படுகையில், மாற்றம் செய்யப்பட்ட பைல்களில் மட்டுமே Backup செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ஏற்கனவே Backup எடுக்கப்பட்ட பைல்களுடன் வைக்கப்படும்.

Backup இலிருந்து பைல்களை மீட்டல்: Backup செய்யப்பட்ட கோப்பிலிருந்து, நம் பைல்களை விரிதது எடுப்பது மிக மிக எளிதான ஒன்றாகும். முதலில், ஏற்கனவே கூறியபடி, Backup and Restore என்ற செயற்பாட்டினை இயக்கவும். இப்போது அனைத்து பைல்களையும் மீட்க வேண்டுமா, அல்லது அழிக்கப்பட்ட, கெட்டுப் போன பைல்கள் மட்டும் மீட்கப்பட வேண்டுமா என்பதனை முடிவு செய்திட வேண்டும்.

அனைத்து பைல்களையும் மீட்க, Restore my files என்புதில் கிளிக் செய்திடவும். அதன் பின்னர் Browse for folders என கிளிக் செய்திடவும். அடுதது இடது பக்கம், உங்கள் Backup பைலுக்குக் கொடுத்த பெயருடன் உள்ள போல்டரைக் காணவும். அதில் கிளிக் செய்து, பின்னர் Add folder என்பதில் கிளிக் செய்திடவும். இந்த போல்டர் இணைக்கப்பட்ட பின்னர், Next என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு, நீங்கள் மீட்கும் பைல்கள், அவை முன்பு இருந்த இடத்தில் பதியப்பட வேண்டுமா அல்லது புதிய இடத்தில் பதியப்பட வேண்டுமா என்பதனைக் கம்ப்யூட்டருக்குச் சொல்ல வேண்டும். இதன் பின்னர், Restore என்பதில் கிளிக் செய்தால், நீங்கள் தேர்ந்தெடுத்தபடி பைல்கள் மீட்கப்படும். குறிப்பிட்ட பைல்களை மட்டும் மீட்க வேண்டும் எனில், Restore my files என்பதில் கிளிக் செய்திடவும். இதன் பின்னர், Browse for files என்பதனைக் கிளிக் செய்திடவும். இப்போது உங்களின் Backup பைல் போல்டருக்குச் சென்று, நீங்கள் மீட்க விரும்பும் பைலைக் கிளிக் செய்திடவும். இங்கேயும், இந்த பைல்களை, அவை இருந்த பழைய இடத்தில் வைத்திடவா, அல்லது புதிய இடத்தில் வைத்திடவா என்ற கேள்வியினை உங்களிடம் கம்ப்யூட்டர் கேட்கும். இதனை முடிவு செய்து காட்டிய பின்னர், Restore என்பதில் கிளிக் செய்திட, பைல்கள் மீட்கப்படும்.

நீங்கள் மீட்க விரும்பும் பைலின் பெயர் உங்கள் நினைவில் இல்லை எனில், Restore my files கிளிக் செய்த பின்னர், சேர்ச் பட்டனைப் பயன்படுத்தி பைல்களைக் கண்டறியவும். சேர்ச் முடிவுகளின் பட்டியலைப் பயன்படுத்தி, நீங்கள் மீட்க விரும்பும் பைல்களைத் தேர்ந்தெடுத்துக் காட்டவும். இவற்றை நீங்கள் மீட்க விரும்பும் பைல்களின் பட்டியலில் இணைக்கவும். பின் மீண்டும் Restore கிளிக் செய்து மீட்கவும்.

# ராஜபக்ஷவிற்கு பாராட்டுவிழா!

முல்லைப் பெரியாறு விவகாரத்தில், மலையாள சினிமாக்காரர்கள் மலையாள இன உணர்வோடு நடந்து கொண்டார்கள் என்பதைவிடவும், தமிழ் சினிமா மீது உள்ள வெறுப்புணர்வை காட்டுவதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டார்கள், என்பது சரியாக இருக்கும்.

ஏனென்றால், கேரளாவில் தமிழ் சினிமாதான் ஆதிக்கம் செலுத்துகிறது.

மலையாளத்தில் மொழி மாற்றம் கூட செய்யாமல் நேரடியாக வெளியிடப்பட்டு, மலையாளிகளிடம் செல்வாக்கு பெற்று திகழ்கிறது தமிழ் சினிமா. இதனால் மலையாளப் படங்களுக்கு திரையரங்குகள் கிடைக்காத நிலையும் நிலவுகிறது.

மட்டமான தமிழ் சினிமாக்களுக்கு, சினிமாக்காரர்களுக்கு எதிராக காட்ட முடியாத எதிர்ப்பை, தமிழர்களுக்கு எதிராக காட்டுகிறார்கள் மலையாள சினிமாவின் மாவீரர்கள்.

தமிழில் பெரிய கதாநாயகனாக ஆவதற்கு மோகன்லால் செய்த தீவிர முயற்சிகளை, சர்வதேச தகுதியுடன் உள்ள தங்களின் திறமைகளின் மூலம் அதை ஆரம்பித்திலேயே கிள்ளி எறிந்தார்கள் மணிரத்தினமும், நாசரும் - "இருவர்", "பாப்கார்ன்" போன்ற கொடுமைகளின் மூலமாக.

இந்த இரு படங்களால், தமிழர்களும் துன்புறுத்தப்பட்டார்கள் என்பது வேறு கதை.

மோகன்லால் போன்றவர்களின் மலையாளப் படங்களில் தமிழர்களை இழிவானவர்களாக, வில்லன்களாக காட்டுவதின் காரணம், தன்னை தமிழ் சினிமாவில் அங்கீகரிக்காததே. இங்கு நடிகராக வெற்றி பெற்றிருந் தால் அப்படி ஒரு காட்சியை அங்கு அவர் எப்படி வைப்பார்?

மற்றபடி, தமிழ் சினிமாவில் நிரம்பி



இருக்கிற மலையாளிகள் எப்படி கேரளாவிற்கோ, தமிழகத்திற்கோ ஆதரவு காட்டாமல் அமைதி காத்தார்களோ, அதே காரணத்திற்காகத்தான், தமிழ் சினிமாவின் தமிழ்த் தேசிய வீரர்களும் மவுனம் காக்கிறார்கள்.

இவர்கள் மலையாளிகளும் இல்லை, தமிழர்களும் இல்லை. பச்சையான சந்தர்ப்பவாதிகள்.

ஈழப் பிரச்சினையில் தற்கொலைப் படையாக மாறுவோம் என்று பொங்கிய தமிழ் சினிமாக்காரர்களின் உணர்வும் தமிழ் உணர்வல்ல, அதுவும் இதுமாதிரியேதான்.

தங்கள் பொன், பொருள், உறவு இவைகளை இழந்து நிர்க்கதியாக உலகமெங்கும் பரவிய தமிழர்கள், தங்களுடன் ஜோதிடம், ஜாதி உணர்வு, கோயில்களைக் கட்டி வருமானத்திற்குச் சண்டை பிடிப்பது, சாமியார்கள் கால்களில் விழுவது, தமிழ் சினிமா மீதான மோகம் இவைகளைத்தான் தங்களின் உடைமைகளாக கொண்டு சென்றிருக்கிறார்கள்.

ஈழத் தமிழர்கள் தங்களின் தொலைந்த வாழ்க்கையை தேடி உலமெங்கும் பரவிய பிறகு, அவர்களை சுரண்டித் தின்னும் கூட்டம் இந்தியத் தமிழர்களிடம் பெருமளவு உருவானது.

ஜோதிடர்கள், சாமியார்கள், ஜாதி சங்கத் தலைவர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சினிமாக்காரர்கள் என்று ஒரு பெரும் கூட்டம் புலம் பெயர்ந்த தமிழர்களை சூறையாடிக் கொண்டிருக்கிறது.

அதில் முக்கியமானவர்கள் இந்த சினிமாக்காரர்கள்.

தமிழர்களின் துயரத்திற்காக பொங்கியது, இலங்கையில் இருக்கும தமிழர்களை நினைத்தோ அல்லது இங்கு அகதிகள் முகாமில் இருக்கும் தமிழர்களுக்காகவோ அல்ல, வெளிநாட்டில் இருக்கும் தமிழர்களிடம் நற்பெயர் பெறுவதற்கும், அவர்களிடம் செல்வாக்கும், நட்பும் பெறுவதற்கும்தான்.

தமிழ்ப் படங்களுக்கான சர்வதேச மார்க்கெட் புலம் பெயர்ந்த தமிழர்கள் உருவாக்கித் தந்ததுதான். புலம் பெயர்ந்த தமிழர்களில் இன்னும் சிலர் தயாரிப்பாளர்களாகவும், விநியோகஸ்தர்களாகவும், சினிமாக்காரர்களுக்கு பாராட்டுவிழா நடத்துபவர்களாகவும் இருக்கிறார்கள்.

அதானல்தான் ஈழப் பிரச்சினைக்கு மீசை முறுக்கி விட்டு, முல்லைப் பெரியாறில் மீசையை மழித்தார்கள்.

ஆக, ஈழப் பிரச்சினையில் மீசை முறுக்கினால்தான் இலாபம். முல்லை பெரியாறில் அமைதி காத்தால்தான் இலாபம். (கேரள மலையாளிகளிடம் தமிழ் சினிமா மாவரைத்து ஏமாற்றுதற்கு வசதியாக இருக்கும்.)

நாளை ராஜபக்ஷ மூலமாக தமிழ் சினிமாவிற்கு பெரிய சந்தை கிடைக்கிறது என்றால், "தமிழர்களுக்காக தன் வாழ்க்கையை அர்பணித்த தானைத்தலைவன் ராஜபக்ஷவிற்கு பாராட்டுவிழா"வும் நடத்துவார்கள்.

**- வே.மதிமாறன்**

## எழுதும் கலை –3



**1.** "கண்ணீத்துளி வர உள்ளுருக்குதல்" கலையின் ஒரு கோடிச் செய்கை. அசைந்து கொடுக்காமல் ஒதுங்கி நிற்கச் செய்வது கலையின் மறு கோடி.

**2.** இரண்டாந்தரம் படிக்க முடியாத ஒரு நூல் இலக்கியத் தரமான நூல் அல்ல. இரண்டாம் தடவை படிக்கும்போது ஒரு நூலில் பல புது அம்சங்கள் கண்ணில் படவேண்டும். கருத்தில் உறைக்க வேண்டும். அப்படிப் புதிதாக எதுவும் உறைக்கா விட்டால் அது தரமான நூல் அல்ல என்பது என் இலக்கிய அபிப்பிராயங்களில் ஒன்றாகும்.

**3.** ஒரு அனுபவத்தை விவரிக்கிற நல்ல கவியின் வார்த்தைகள் நமது (அதாவது வாசகனின்) உள்ளத்தில் மறைவாகக் கிடக்கிற அனுபவங்களில் ஏதோ ஒன்றைப் பாதாளக் கரண்டி போலப் பற்றி இழுக்கிறது. ஏதோ புரிகிறமாதிரி தெரிகிறது. உடனடியாகவே இந்த அனுபவ எதிரொலிப்பு நிகழ்கிறபடியால் நாம் அதைப்பற்றி அதிகமாக சிந்தித்துப் பார்ப்பதில்லை. நம்முடைய செயல், சிந்திப்பு எதுவும் இல்லாமலே, தானாகவே, ஒரு அனுபவம் இன்னொருவரின் அனுபவத்தை தட்டி எழுப்புகிற மாதிரி இருக்கிறது. அப்படித் தட்டி எழுப்பாது போனால், ஒரு அனுபவத்தைச் சித்தரிக்கிற வார்த்தைகள் படிப்பவன் உள்ளத்தில் எதிரொலியை எழுப்பாது போனால் அதை நல்ல கலை என்று நாம் ஏற்றுக்கொள்வதில்லை.

**4.** கலை என்பது என்ன என்று யோசிக்கையில் அது சற்று சிரமமான விஷயந்தான். கடவுளை எடுத்துக் கொண்டு அதைச் சொல்லலாம் அல்லது கடவுளை மறுக்கிற வேதாந்தத்தை, பிரம்மவாதத்தை எடுத்துக் கொண்டு அதை நாம் தெளிவாக்கலாம். எந்த தெய்வத்தையுமே, எந்த நிர்க்குண பிரம்மத்தையுமே வார்த்தைகளில் அகப்படாத்து என்று வர்ணிப்பதுதான் நமது மரபு. வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட என்கிற நிர்குண பிரமத்தையும், கடவுளையும் போன்றதுதான் இலக்கியமும்.

**5.** ஒருவகை மொழிகடந்த பொருள்தான் இலக்கியம். எனவே இலக்கியத்தை பூனை காலால் தூரத்தில் தொட்டுப் பார்ப்பது போல்தான் செய்ய முடியும்.

**6.** கலைக்கும் பிரச்சாரத்துக்கும் இடையில் ஒரு மயிரிழைதான் வித்தியாசம் இருக்கிறது.

**7.** இலக்கியம் ஒன்றும் (ஒன்றையும்) சொல்லாமலும் இருக்கலாம்.

**8.** எழுத்தாளன் அவனுடைய அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணியைப் பிரதிபலித்தே ஆக வேண்டும் என்பதில்லை. இந்த அம்சங்களோடு ஒத்துப் போகலாம. அல்லது எதிர்த்துக் கலகம் செய்யலாம். அது ஒரு பிரக்ஞா பூர்வமான செயல்.

**- க.நா.சுப்ரமணியம்**

## நாங்கள் இந்துக்கள்...

**- ஏ.கே -**

சும்மா கொஞ்ச நேரம்

இன்று பலபேராலும் முணுமுணுக்கப்படுவது - மனிசர்கள் கூடாரங்களில் வாழ கோயில்கள் மட்டும் பிரமாண்டமாய் கட்டப்படுகின்றன.

போருக்குப் பின்னரான யாழ்ப்பாணத்தில் ஆலயங்களின் புனரமைப்புகளும் குறிப்பிட்ட இடத்தைப் பிடிக்கின்றன. குறிப்பாக இந்து ஆலயங்கள் மிகுந்த பொருட்செலவில் ஆடம்பரமாக கட்டப்படுகின்றன.

கவனித்துப் பார்த்தால் இதில் ஊரவர்களின் பங்களிப்பு குறைவாக இருக்க புலம்பெயர்ந்த ஊரவர்களின் பங்களிப்பே மிகக் கணிசமான இடத்தைப் பிடித்துக் கொள்கிறது.

சில ஆலயப் புனரமைப்புக்குத் தனியொருவரே கோடிக்கணக்கில் செலவழித்து கும்பாபிஷேகம் நடந்த சம்பவங்களும் உண்டு.

அன்றாட ஆலயக் கருமங்களில் இந்துக்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக அல்லது அறவே அற்ற நிலையில் காணப்படுகின்றது.

சில இந்துஆலயங்களில் சாமி தூக்குவதற்கே ஆண்கள் இல்லாத நிலையில் காணப்படுகின்றன.

கடமையே என்று உபயகாரர்கள் தமது உபயங்களை செய்கிறார்கள். பல சிறு உபய பூசைகளில் உபயகாரரே தீவர்த்தியும் பிடித்து மணியும் அடிக்க வேண்டிய நிலைமை.

நித்திய பூசைகளில் பங்குபற்றுவோர் மிகவும் குறைவு. பிரமாண்டமான தூபிகளும், தரைக்கு ரைல்ஸ்களும் பதித்த கோயில்களுக்கே கும்பிடுவதற்கு ஆட்கள இல்லை. குறிப்பாக இளைய சமுதாயம் இந்த வழிபாடுகளில் இருந்து விலகிச் செல்வதைக் காணலாம்.

பல நித்திய பூசைகள் வெறுமனே ஐய்யர் மட்டுமே வந்து போகும் நிலையில் காணப்படுகின்றன. ஏதாவது பெரியளவில் உற்சவம், அன்னதானம் என்றால் மட்டுமே மக்கள் ஆலயங்களில் கூடுகின்றனர். அதிலும் வழிபாடுகளில் பங்குபற்றுவதிலும் பார்க்க ஊர்ப்புதினங்களை அறிவதற்கும், விடுப்புப்பார்ப்பதற்குமே வழிபாட்டு நேரத்தை செலவிடுகின்றனர்.

எழுமாற்றாக வீதியில் 10 இந்துக்களை தெரிந்து அவர்களில் ஒருதேவாரத்தையாவது பிழையின்றி சொல்லக்கூடியவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள் என்று பார்த்தால் உண்மை நிலையை அறிந்துகொள்ளலாம்.


அன்னதானங்கள் அன்னமற்றவர்களுக்காகவன்றி அன்னம் உள்ளவர்களுக்கே நடாத்தப்படுகிறது. போதாக்குறைக்கு அவர்களே சொப்பிங் பைகளிலும் அன்னதானத்தை வாங்கி செல்கின்றனர். முன்னர் இவ்வாறு சொப்பிங்பைகளில் அன்னதானத்தை மூட்டையாகக் கட்டிச் செல்வது கௌரவக்குறைச்சலாகக் கருதப்பட்டது. ஏதேனும் பாத்திரத்தில் இட்டு வாழையிலையால் மூடியோ, அல்லது வாழையிலையில் இட்டு கடதாசியில் சுற்றியே தான் வீட்டுக்கு அன்னதானத்தை எடுத்துச் செல்வார்கள்.

இன்று காஞ்சிபுரம் சேலை அணிந்தவர்கள் கூட சொப்பிங் பைகளுக்குள் அன்னதானத்தை இட்டு மூட்டையாகக் கட்டி எடுத்துச்செல்கின்றனர்.

பூசை புனஸ்காரங்கள், கிரியைகள் முதலாவற்றின் மீதான இந்துக்களின் சிரத்தையும் நம்பிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளன என்றே சொல்லவேண்டும். ஒரு மாதத்தில் வரும் சதுர்த்திகள், விரதங்கள் என்பதையிட்டு எத்தனைபேர் அக்கறை கொள்கிறார்கள். சைக்கிளிலும், மோட்டார் சைக்கிளிலும், வாகனங்களிலும் விரைவாகக் கடந்து போகும் போது ஆலயத்தைப்பார்த்து ஒரு அவசர கும்பிடு போடுவதுடன் சரி, பிறகு ஆலயத்தைப் பற்றியே சிந்தித்துப்பார்பதில்லை.

ஆலய வழக்குகள் அநேகம் இன்றும் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றது. இவற்றுக்கு காரணம் கோயில் நிர்வாகிகளுக்கிடையேயான அழுக்காறு, அவா, வெகுளி, இன்னார் சொல் என்பவையே ஆகும்.

ஆலய வழிபாடுகளில் மக்கள் நம்பிக்கையிழந்து போனதற்குக் காரணங்கள



பலவற்றைச் சொல்லலாம் யுத்த அவலங்கள தெய்வங்கள் காப்பாற்றும் என்று இருந்தால் தெய்வங்களே களவாடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புரியாத மொழியான சமஸ்கிருதத்தில் பூசைகள் நடைபெறுவது, அவசர வாழ்க்கை, புலம்பெயர் உறவுகள் இங்கு வந்து போகும்போது அவர்களுடன் ஒப்பிட்டு எமது சமயத்தையும் கலாசாரத்தையும் இழிவாக நினைப்பது, மதுவும் மாமிசமும் தவிர்க்க முடியாதவையாகி விடும்போது, சமயத்துக்கு முன்னுதாரணமாக திகழ்பவர்களே அவற்றிலிருந்து பிறழும்போது எல்லாரும் 'பச்சைக் கள்ளர்கள்' என்ற பொதுவான முடிவுக்கு சாதாரண மக்கள் வந்துவிடுவார்கள்.

உதாரணத்துக்கு திருக்கேதீஸ்வரத்தில் நடந்த சிவராத்தி நிகழ்வை எடுத்துப் பார்த்தால் வழிபாட்டில் மக்கள் பங்கு எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ளலாம். பூசை ஏற்பாடுகளும், அன்னதான, தாக சாந்தி ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. ஆனால் வந்தவர்களில் மிகப்பெரும்பாலானோர் வெளிவீதிகளிலும், பாதை ஓரங்களிலும், மரங்களின் கீழும், ஏன் கோயிலின் உள் பிரகாரத்தில்கூட பெட்சீற், பாய் மற்றும் இன்ன பிற சாதனங்களுடன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

இரவு 10 மணிக்கே வெளிவீதியில் அனைவரும் படுத்துவிட்டனர். நுளம்பு வலை ஒன்று கொண்டு வராத குறைதான். மற்றுமபடி தூங்குவதற்கான சகல ஏற்பாடடிலும் அவர்கள் வந்திருந்தனர். ஆகக்குறைந்தது லிங்கோற்பவகாலம் மட்டுமாவது விழித்திருப்போமே என்ற சிந்தனை இல்லாது பெரும்பாலானவர்கள் நல்ல நித்திரை செய்தனர்.

அதுவும் நன்றாக பெட்சீற்றால் போர்த்து மூடியபடி நள்ளிரவு 12 மணி போல ஆலய வீதியைப் பார்த்தால் ஏதோ போர்க்களத்தில் மாண்டு கிடந்தவர்களைப்போல கோயில் வீதியெங்கும் வழியெங்கும் மக்கள் தூக்கிக்கிடந்தனர்.

இவர்களின்கொள்ளைப்படி சிவராத்தி என்பது பலமைல்கள் தூரம் பயணம் செய்து திருக்கேதீஸ்வரத்தில் வந்து சிவராத்தியன்று இரவு நித்திரை கொள்வதாகும்.

பாலாவி தீர்த்தக் கரையோ சொப்பிங பாய்க்குகளாலும், கடதாசிகளாலும், பிளாஸ்ரிக் கப் மற்றும் கச்சான் பைகள், ஏன் குழந்தைகளின் பம்பேஸ் எனப்படும் உள்ளாடையிலும் நிரம்பி- இருந்தது எனவே இந்துக்களின் புனிதம் எங்கே? ஆசாரம் எங்கே? பண்பாடு எங்கே?

வெள்ளை நிற பூவுமல்ல
வேறெந்த மலரும் அல்ல...
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது...

# அமெரிக்க சிறப்புப்படைகள் இந்தியாவில் எப்போதும் இல்லை

## மறுக்கிறது இந்தியா

தீவிரவாதத்தினை எதிர்த்துப் போரிடும் விடயத் தில் ஆசிய நாடுகளுக்கு உதவி செய்யும் நோக்கில் அமெரிக்கா செயற்படுகிறது என்ற அமெரிக்க அதிகாரி வெளியிட்ட கருத்திற்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஆசிய நாடுகளில் தீவிரவாத அச்சுறுத்தல்கள் அதிகரித்துக்கொண்ட நிலையில், ஆசிய நாடுகள் தீவிரவாதத்தை ஒழிக்க உறுதி பூண்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின், அமெரிக்க பசிபிக் கொமாண்ட் பிரிவு அட்மிரல் ரூபர்ட் வில்லார்ட் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

தீவிரவாதத்தினை ஒழிக்க ஆசிய நாடுகளில் அமெரிக்கா தனது சிறப்பு இராணுவப்படையை அமைத்துள்ளது.

இதில் இந்தியா, நேபாளம், இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவுகள் ஆகிய நாடுகளில் அமெரிக்காவின் சிறப்பு இராணுவப்படைகள் உள்ளன என்று தெரிவித்தார்.



பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் லஷ்கர்-இ-தொய்பாவின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியாவுக்கு உறுதுணைபுரியும் பணிகளில் அமெரிக்க சிறப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

வில்லார்டின் இந்தப் பேச்சுக்கு இந்தியா மறுப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய வெளியுறவு மற்றும் இராணுவ அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இந்தியாவில் சிறப்பு அமெரிக கப்படைகள் இல்லை. அமெரிக்காவுடன் இணைந்து இராணுவ ஒத்திகை பயிற்சியில் தான் இந்தியா ஈடுபட்டு வந்துள்ளது.

பான்கோ எனப்படும் பசிபிக் கொமாண்ட் அமைப்பு தீவிரவாதத்தினை எதிர்த்து எப்படிப் போரிடுவது என ஒத்திகையைத்தான் அமெரிக்காவுடன் இந்தியா மேற்கொண்டதே தவிர சிறப்பு இராணுவப்படைகள் இந்தியாவில் கடந்த காலங்களில் இருந்ததில்லை. தற்போதும் இல்லை.

தீவிரவாதத்தினை எதிர்கொள்வதிலும், ஒழித்துக் கட்டுவதிலும் இந்தியா எப்போதும் சுயமாகத்தான் செயற்படும், வெளிநாட்டவர் உதவியை நாடும் எண்ணம் இந்தியாவிற்கு இல்லை என்று கூறியுள்ளது.

# 2 ஜி வழக்கின் தீர்ப்பு; ராசா மறுஆய்வு மனு




(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா மறுஆய்வு மனுத் தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது ஸ்பெக்ட்ரம் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் என்னைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வழக்கில் நான் மனுதாரராகவோ, பிரதிவாதியாக இல்லாத போது என்னுடைய நடவடிககைகளை விமர்சித்து இருப்பது சரியானதல்ல. விளக்கம் கேட்டிருந்தால் என்னுடைய நடவடிக்கைகள் சட்டபூர்வமானவை, சரியானவை, யாருக்கும் சலுகை காட்டவில்லை என்பதை தெரிவித்திருப்பேன்.

புதுடில்லி தனி நீதிமன்றில் நடக்கும் ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பாதிக்கும். உச்ச நீதிமன்றமே இப்படி தீர்ப்பு அளித்த பின்னர், கீழ்நீதிமன்றில் அதை உதாசீனப்படுத்த இயலாது. எனவே, தீர்ப்பை உச்ச நீதிமன்றம் மறுஆய்வு செய்ய வேண்டும் என்றார்.

# தொலைபேசி ஒட்டுக்கேட்பு; விசாரணைக்கு உத்தரவு



(புதுடில்லி)

இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனியின் அலுவலகத்தொலைபேசி உரையாடல் ஒட்டுக் கேட்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய உளவுத்துறை (ஐ.பி) விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோணி அலுவலகம் ஒட்டுக் கேட்கப்பட்ட விஷயம் கடந்த மாதம் 16ஆம் திகதி கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

தொலைபேசி இணைப்புக்களை இராணுவத் தொழில்நுட்ப வீரர்கள் இருவர் சோதனை செய்த போது, இந்த ஒட்டு கேட்பு விஷயத்தைக் கண்டுபிடித் துள்ளனர்.

இதையடுத்து இந்த விவகாரம குறித்து மத்திய உளவுத்துறை (ஐ.பி) விசாரணை நடத்த பாதுகாப்புத்துறைச் செயலாளர் சசிகாந்த் சர்மா உத்தரவிட்டுள்ளார்.

வயதுப் பிரச்சினை தொடர்பாக இராணுவத்தளபதி வி.கே. சிங்குக்கும், இராணுவ அமைச்சகத்துக்கும் முரண்பாடு ஏற்பட்டது. உச்சநீதிமன்ற தலையீட்டால் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

அதன்பின் இந்த ஒட்டுக்கேட்பு விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதேபோல் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அலுவலகம் கடந்த ஆண்டு ஒட்டுக் கேட்கப் பட்டது. அவரது அலுவலகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்து ஒட்டுக் கேட்புக் கருவிகள கண்டுபிடிக் கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


## துவக்காலச் சிந்தனை



### நமது பகைவருக்காக செபிப்போம்

சோதனையும் வேதனையும் மனித வாழ்வில் இணைந்து காணப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றது. மனிதனானவன் ஆசைக்கு அடிமைப்படும்போது அவன் சோதனைக்கு உட்படுகின்றான். அந்தச் சோதனைகளில் தோல்வியடையும் போது அது வேதனையையும், இறப்பையும் கொண்டு வருவதாக அமைகின்றது. ஆதிப்பெற்றோர் தாமும் கடவுளைப்போல் ஆகவேண்டும் என்ற ஆசையினால் அலகையின் சோதனைக்கு உட்பட்டு சாவையும், நோவையும் சுவீகரித்துக் கொண்டார்கள்.

பாவம் மனித சமூகத்திற்குள் புகுந்து விட்டது. கிறிஸ்துவையும் அந்த சாத்தான் விட்டுவைக்கவில்லை. கர்ச்சிக்கும் சிங்கம்போல அலகை யாரை விழுங்கலாம் என்று அலைகின்றது. கிறிஸ்துவாகிய பச்சைமரத்துக்கே இந்தக்கதியெனின் சாதாரண மக்களாகிய பட்டமரத்துக்கு என்ன கதி நிகழுமோ?

ஆசையை ஒறுக்கின்றவன் ஞாயியாகின்றான். இயேசு ஆசைகளை ஒறுத்ததினால் சாத்தானின் சோதனையை வென்றார். அவரின் ஆழமான இறைபற்றால் தந்தையின் ஆவி என்றும் அவரோடு இருந்து செயற்பட்டது. நாமும் இறைவனிடம் மன்றாடுவோம். சோதனைகள் வரக்கூடாது என்று அல்ல அச்சோதனைகளை எதிர்கொள்ளக்கூடிய சக்தியையும், மனத்திடத்தையும் தரவேண்டும் என செபிப்போம்...

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்




# சீன எல்லையருகே இந்தியப்படை இரவு பகலாக போர்ப்பயிற்சி

(புதுடில்லி)



அருணாச்சலப் பிரதேசத்தில் சீன எல்லை அருகே இராணுவம் மற்றும் விமானப்படை இரவு, பகலாக போர்ப்பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றன.

இராணுவமும், விமானப்படையும் இணைந்து பிராலே என்ற பெயரில் கூட்டு போர்ப் பயிற்சியை கடந்த புதன்கிழமை முதல் நடத்தி வருகிறது.

விமானப்படையின் சுகாய், மிராஜ 2000, மிக்,29, ஜாக்குவார், பைசன், எம்ஐ,17, ஏஎன்,32, சி,130, அவாக்ஸ் ரக போர் விமானங்கள் மற்றும் நடுவானில் பெட்ரோல் நிரப்பும் விமானம், ஆளில்லா போர் விமானம் போன்றவை இந்தப் போர்ப் பயிற்சியில் கலந்து கொண்டன.

நெடுந்தூரம் சென்று தாக்கும் குண்டுகளுடன் நவீன போர்ப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் கற்றுக் கொள்ளப்படும் பாடங்கள் எதிர் கால போர் யுக்திகளில் பயன் படுத்தப்படும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்தியச் செய்திகள்

# 300 ரூபா கடனால் மாப்பிள்ளையின் கைகள் துண்டிப்பு

(பீகார்)

300 ரூபா கடனைத் திரும்பிக் கொடுக்காத காரணத்தால் புது மாப்பிள்ளையின் இரு கைகளைத் துண்டித்த கொடூரச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது பீகாரின் தலைநகர் பாட்னாவிலிருந்து 80 கி.மீ. தொலைவில் உள்ள அர்வால் மாவட்டம் கின்ஜார் கிராமத்தைச் சேர்ந்த ராம்சாகர் சந்திராவன்ஷி (வயது - 21) என்ற வாலிபர் கூலித்தொழிலாளியாக அங்குள்ள நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றார்.

இவருக்கு கடந்த மாதம் திருமணம் நடந்தது. இந்நிலையில் தனது ஊரைச்சேர்ந்த சுஷில்குமார் என்ற பேருந்து நடத்துநரிடம் 300 ரூபா கடன் வாங்கியிருந்தார்.

அதனை அவரால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. அதற்குப் பதிலாக பேருந்து நடத்துநரின் அடியாட்கள் கூத்ரா கிராமத்திற்குச் சென்று உடனடியாகக் கடனைச் செலுத்துமாறு வற்புறுத்தினர்.


இதன்போது ஏற்பட்ட தகராறில் அங்கிருந்த கோடாலியால் இருகைகளின் மணிக்கட்டினை வெட்டித் துண்டாக்கியுள்ளனர்.



படுகாயமடைந்த ராம்சாகர் அதே இடத்தில் மயங்கி விழுந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பீகாரில் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. காயமடைந்த ராம்சாகர், பாட்னா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# அமெரிக்காவில் புயல் 15பேர் பலி; கடும் சேதம்




(வொஷிங்டன்)
அமெரிக்காவின் பல மாகாணங்களில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த புயல் மற்றும் சுழல் காற்றினால் பலர் பலியாகி உள்ளனர் மேலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிட் பெஸ்ட் கடல்பகுதியில் உருவான புயல் அப்பகுதியை கடுமையாகத் தாக்கியது. புயல் கரையைக் கடந்த போது ஏற்பட்ட பயங்கரச் சூறைக்காற்றால் கட்டடங்கள் இடிந்தன.

அமெரிக்காவின் இண்டியானா, கென்டக்கி மற்றும் ஒஹியோ மாகாணங்கள் கடுமையான சேதத்திற்கு உள்ளானது. இதற்கு முன்னதாக அலபாமா மாகாணம் கடுமையான சேதமடைந்தது.

இப்புயற் தாக்குதலில் இதுவரை 15 பேர் உயிரிழந்ததாகவும், நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்ததாகவும் தவல்கள் தெரிவிக்கின்றன.

புயலினால் தகவல் தொடர்பு வசதிகள், மின்சார வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.



# கிறிஸ்தவப்பெண் மொட்டையடிக்கப்பட்டு பாகிஸ்தானில் துன்புறுத்தல்

பாகிஸ்தானில் கிறிஸ்தவப் பெண் ஒருவரை கடுமையாகி அடித்துத் துன்புறுத்தி, மொட்டையடித்து தெருக்களில் இழுத்துச்செல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


பாகிஸ்தானின் லாகூரில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சியால்கோட் மாவட்டத்தில், கோட் மீரட் கிராமத்தைச் சேர்ந்த 30 பேர் சீமா பீபி என்ற பெண்ணைக் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி அவரது வீட்டில் இருந்து வெளியே இழுத்து வந்து கடுமையாக அடித்துத் துன்புறுத்தியுள்ளனர்.

அத்துடன் அவரது தலையை மொட்டையடித்து, தெருக்களில் ஊர்வலமாக இழுத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் குறித்து அங்கு வசிக்கும் கிறிஸ்தவ மக்கள் கூறுகையில், அவருக்கும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் சில நாட்களாகவே மிரட்டல் வந்து கொண்டிருந்தது. இதனால் அவர் இந்தக் கிராமத்தை விட்டு சென்றுவிட்டனர் என்றனர்.

சீமா பீபியை அடித்துத் துன்புறுத்திய 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மாகாண பொலிஸ் அதிகாரி முகமது அமின் கூறினார். மேலும் அவரும், அவரது குடும்பத்தாரும் தற்போது எங்கு தங்கியிருக்கின்றனர் என்பது தெரியவில்லை என்றார்.

## உலகச் செய்திகள்

# மிகப்பெரிய தகவல் ஒளிபரப்பு கோபுரம்



உலகின் மிகப்பெரிய தகவல் ஒளிபரப்புக் கோபுரமான ஸ்கைட்ரீயின்(Sky Tree) கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடைந்ததையொட்டி, விரைவில் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட உள்ளது.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோ நகரில் உலகின் மிகவும் உயரமான தகவல் தொடர்புக் கோபுரத்திற்கு கடந்த 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி கட்டுமானப்பணிகள் தொடங்கின.

மொத்தம் 634 மீட்டர்(2,080 அடி உயரம்) உயரம் கொண்ட இந்தக் கோபுரத்தின் அனைத்து கட்டுமானப்பணிகளும் முழுமையாக நிறைவடைந்தன. ஒபாயஷிகி கோர்ப்பரேசன் என்ற நிறுவனம் இக்கோபுரத்தை கட்டி முடித்துள்ளது.

# ஈரானில் அமைதியான தேர்தல்



ஈரானில் நடைபெற்ற நாடாளுமன்றத் (மஜ்லிஸ்) தேர்தல், எவ்வித பிரச்சினைகளும் இன்றி அமைதியான முறையில் நடந்து முடிந்தது.

அமெரிக்கா, ஜரோப்பா உட்பட மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்புகளுக்கு ஆளாகியுள்ள ஜனாதிபதி அகமது நிஜாத்துக்கு மக்கள் ஆதரவு எந்த அளவுக்கு உள்ளது என்பதைத்தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாக இது கருதப்படுகிறது.

மொத்தம் 290 இடங்களுக்கு தேர்தல் நடைபெற்றது. ஈரானின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 4.8 கோடியாகும்.

எனினும் முக்கிய எதிர்க்கட்சியான மறுமலர்ச்சியாளர் கட்சி இத்தேர்தலை புறக்கணித்து விட்டது. முன்னதாக 2009ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அகமது நிஜாத் குழப்படிகளை செய்து வெற்றி பெற்றார் என்று எதிர்க் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# 131 வருட கால கிறிஸ்தவ ஆலயம் இடிப்பு



நியூசிலாந்து நாட்டில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சேதம் அடைந்த 131 ஆண்டு பழமையான கிறிஸ்தவ ஆலயம் இடிக்கப்படுகிறது.

நியூசிலாந்து நாட்டில் வெலிங்டன் நகரின் மையப் பகுதியில் விக்டோரியா மகாராணி காலத்தில் கட்டப்பட்ட 131 ஆண்டு பழமையான கிறிஸ்தவ ஆலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தைச்சுற்றி மிகப்பெரிய பூங்கா உள்ளதால், ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்தனர்.

நியூசிலாந்தில் கடந்தாண்டு பெப்ரவரி மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இந்த ஆலயம் கடுமையாக சேதம் அடைந்தது.

இது ஆபத்தான நிலையில் இருப்பதால் இடிக்க முடிவு செய்யப்பட்டது. இந்த ஆலயத்தின் புனிதத் தன்மையைக் கருதி கட்ட இடிப்புப் பணியில் மிகப்பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

என்னால் எழுதாமல் இருக்க முடியாமல் இருப்பதால் எழுதுகிறேன். – நகுலன

என்னுள் ஏதோ கட்டுக்கடங்காத நிர்ப்பந்தம் உந்தித் தள்ளினாலொழிய நான் எழுதுவதில்லை. – ராஜாராவ

எழுதுவதால் நான் மேன்மையுறுகிறேன். அதற்காக எழுதுகிறேன். – ஜெயகாந்தன்

நீங்கள் ஏன் எழுத்தாளனானீர்கள் என்று யாராவது கேட்டால், நான் சொல்வது இதுவாகத்தான் இருக்கமுடியும். அடி நாளிலிருந்து நான் எழுத்தாளனாகத்தான் இருந்திருக்கிறேன். வேறெதுவும் சொல்லி என்னை அழைத்துக் கொள்ள முடியாது. – எம்.டி.வாசுதேவன் நாயா

தொந்தரவுக்குள்ளான பிள்ளைகள் கலைஞர்களாகவோ சமூகவிரோதிகளாகவோ மாறுவது தவிர்க்க முடியாதது. அப்பாவின் வாழ்வும் அம்மாவின் இருப்பும்தாம் என்னை கவிஞனாக்கின. வளர்ந்து ஆளானபின்னும் மேற்படிப்பு, வேலை, பணம், பெண் எல்லாமே உரிய வயதில் உரியபடி கிடைக்காதுபோய், பின்றும் பின்றும் தொந்தரவுக்குள்ளானவனாகவே தொடர்ந்து இருந்து வர நேர்ந்தது, கவிஞனாக இருப்பது தவிர வேறு வழியே இல்லை என்றாக்கிவிட்டது. – விக்ரமாதித்யன

என் மொழிக்குள் நான் சுருங்கிக் கொண்டேன். – பாப்லோ நெருடா

எழுத்து எனக்கு ஒரு வடிகால். என் ஜீவியத்தின் ஆதாரம். – நிக்கி கியோவன்னி

ஒவ்வொரு இலக்கியாசிரியனும் மொழிக்குப் பிடிகொடுக்காத வாழ்வின் புதிரைத் தெளிவுபடுத்தத்தான் எழுதுகிறான். – விர்ஜீனியா வுல்ஃப

எழுத்து ஒரு தவம். – தி.ஜானகிராமன்

நான் எதை எப்படி எழுதினாலும் எழுதுவதனைத்தும் என் மூலம் வந்து நானாகத்தானே விரிகிறது. – கிருஷ்ணன் நம்பி

எழுதுவதற்கான எந்தத் திறமையும் என்னிடம் இல்லையென்பதைக் கண்டுகொள்ள எனக்குப் பதினைந்து வருடங்கள ஆயின. அதன்பிறகும் என்னால் எழுதுவதை நிறுத்த முடியவில்லை. ஏனெனில் நான் எழுத்தாளனென்று பெரும் புகழடைந்துவிட்டேன். – றொபேட் பெஞ்ச்லி

காஃப்கா, "எனது கையெழுத்துப் பிரதிகள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும்" என்று தன் நெருங்கிய நண்பரான மேக்ஸ் ப்ராட்டிடம் கூறியிருக்கிறார். அவரது நண்பர் அதைச் செய்யவில்லை. ஒருவர் தனது படைப்புகளை அழிக்க விரும்பினால் அவரே தீயில் எரித்திருக்க வேண்டும். தனது நண்பர் அவ்வாறு செய்ய மாட்டார் என்பதைத் தெரிந்திருக்கிறார். – ஜோர்ஜ் லூயி போர்ஹே

என் சடலத்தைக் கொளுத்த வேறு எரிபொருள் வேண்டியதில்லை; என்னிடம் குவிந்து கிடக்கும் கையெழுத்துப் பிரதிகளே போதும். – பெ.நா.அப்புஸ்வாமி

தனது கடுமையான விமர்சனப் பார்வைகளுக்கு நடுவிலும் கூட வாய்விட்டுச் சிரிக்கக்கூடிய பல குத்தல்களைப் பொதிந்து வைத்திருப்பவர் வெங்கட் சாமிநாதன். "எந்தவொரு 35 வயதான இந்தியனுக்கும் என்றாவது ஒரு நாள் இந்தியாவின் ஜனாதிபதியாகும் வாய்ப்பு இருப்பது போலவே என்றாவது ஒரு நாள் மு.மேத்தாவும் கூட கவிதை ஒன்றை எழுதக் கூடும்" என்ற கிண்டல் வெகு பிரபலமான ஒன்று. இதழாளர் மாலனை "தென்னாட்டு குல்தீப் நய்யார் என்றும் பெஞ்சமின் ப்ராட்லி" என்றும் புகழும் உதயமூர்த்தியைப் பற்றி தனக்கேயுரிய அங்கதத்துடன் வெ.சா எழுதுகிறார், "இதன் மூலம் மாலனைப் பற்றி மட்டும் அல்ல தனனைப் பற்றியும் எம்.எஸ்.உதயமூர்த்தி சொல்லிவிடுகிறார்." கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் உ.வெ.சாமிநாதையருடைய சீடர் என்பது குறித்து வெ.சா, "மகாத்மா காந்தி கூடத்தான் சில்லறைத் தவறுகளாகப் பாவங்களாக சிலவற்றைச் செய்து விட்டுப் போயிருக்கிறார். அதைப் போல உ.வெ.சா-வும் பெரிய பாவமாக ஒன்றைச் செய்திருக்கிறார். போகட்டும், அதற்காக உ.வெ.சா-வைப் போய் குற்றம் சொல்ல முடியுமா என்ன?" என்று எழுதியதைப் படிக்கும் நேரம்போது வரும் சிரிப்பை யாராலும் அடக்க முடியாது. – ச. திருமலைராஜன்

அகிலன் ஞானபீடப் பரிசு பெற்றதைப் பத்திரிகைச் சக்திகளும் சக கேளிக்கையாளர்களும் கொண்டாடுவது இயற்கையான காரியம். ஜிப்பா தேசிய உடையாவதை ஜேப்படித் திருடர்கள் வரவேற்பது மாதிரி இது. – சுந்தர ராமசாமி

# சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தலால்; தீர்வுக்கான தடையை நீக்க வேண்டும்!

– மதியழகன் கட்டுரையிலிருந்து

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான அரசியல் வரலாற்றில் பேச்சுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. நம்பிக்கையீனங்களின் மத்தியிலும், விருப்பின்மைகளின் மத்தியிலும் பேச்சுகள் தொடர்கின்றன. இதுதான் அவலம். இதுதான் விந்தையிலும் விந்தை. இதிலும் விந்தை என்னவென்றால், இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஐக்கியத்துக்கும் இடமிருப்பதில்லை. பிரிவினைக்கும் இடமிருப்பதில்லை. தீர்வும் எட்டப்படுவதில்லை. பேச்சுகள் இனி நடைபெறாது என்ற உத்தரவாதங்கள் ஏற்படுவதும் இல்லை.

ஆகவே, அர்த்தமற்ற முறையில் - சம்பந்தப்பட்ட தரப்புகளின் தேவைகளுகேற்ப பேச்சுகள் நடைபெறுவதே வழககமாகியுள்ளது. பேச்சுவார்த்தை என்பது அதன் அர்த்தத்தையும் நோக்கத்தையும் இழந்து சம்பந்தப்பட்ட தரப்பினரின் அரசியல் அங்கீகாரத்துக்கும் அரசியல் இருப்புக்குமான ஒரு உபாயமாக மாறியுள்ளது என்று கொள்ள வேண்டிய நிலையே இன்று உருவாகியிருக்கிறது.

தமிழ் மக்கள் பொதுவாக இரண்டு வகையான அரசியற் பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில் இருக்கிறார்கள்.

1. முதலாவது, அவர்களுக்கான சுயநிர்ணய உரிமை.

2. தமது வாழ்க்கைக்கான வசதிகளை - பொருளாதார அடிப்படைகளை உருவாக்கிக்கொள்வது.

இவை இரண்டுமே அவர்களுடைய பிரதான தேவைகளும் குறிக்கோள்களுமாகும். ஆனால், இவற்றை வியாக்கியானப் படுத்துவோரும் இவற்றைப் பெறுவதறகான வழிகளை மொழிவோரும் வேறு வேறுவகையான பார்வைகளையும் வேறு வேறான கோணங்களையும் கொண்டுள்ளனர். அப்படி இருப்பது இயல்பே.

ஆனால், சாத்தியங்களைக் குறித்தும் அவர்கள் சிந்திக்க வேண்டும். அந்தச் சாத்தியங்களே வெற்றியைத் தரும். அதையே பொதுத்தரப்புகளும் ஏற்றுக் கொள்ளும். இந்த விருப்பத்தை எந்தத் தரப்புகள் அடையாளப்படுத்துகின்றன?

மக்களின் விருப்பங்களைத்தான் தாம் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்று சொல்பவர்கள், மக்களுக்கான தேவைகளுடனும் அவர்களுடைய வாழ்க்கையுடனும் தங்களை இணைத்துக்கொண்டிருந்த காலம் தூர்ந்து போய் விட்டது. இப்போது அவரவர் தமக்குக் கிடைத்திருக்கும் அதிகாரம், வலு என்பவற்றிற்கேற்ப தமது அடையாளபபடுத்தல்களைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

மக்களின் விருப்பம் என்பது என்ன? அதை யார் எவ்வாறு அடையாளப் படுத்துவது?

மக்களின் விருப்பங்கள் திரைகளால மறைக்கப்பட்டுள்ளன. தேர்தற்காலத்து ஊடகப்பரப்புரைகளை அவதானித்தாலே அவை எவ்வளவு பிற்போக்குததனமானவை என்பதை ஊகித்துக்கொளளலாம். சனங்களை மந்தைகளாக்கும் அரசியற் செயற்பாடுகளே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் சனங்களின் விருப்பங்களுக்கான சுயாதீனம் கிடையாது. அதற்கு வாய்ப்பும் இல்லை. ஆகவே அவர்களுடைய தெரிவுகளும் விருப்பங்களும் சரியான முறையில் தெளிவாகுவதில்லை.

ஆகவே, அவற்றை அடையாளப் படுத்துவதற்கான மாற்றுகளோ, இடைவெளிகளோ சமூகச் சூழலில் இல்லை. பதிலாக அவர்கள் தியாகி - துரோகி என்றோ, கறுப்பு - வெள்ளை என்றோதான் சிந்திக்கப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தெரிவுகளுக்கு இடமேயில்லை.

எந்தக் கருத்துநிலைக்கு ஊடகப் பரப்பில் செல்வாக்குண்டோ அதுவே ஏற்றுக்கொள்ள வைக்கப்படுகிறது. இவ்வாறு முன்வைக்கப்படும் கருத்து நிலையானது, ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் விருப்பமேயாகும். ஆனால், அந்த விருப்பம் பிரதானப்படுத்தப்பட்டு பரப்புரை செய்யப்படுமிடத்து, அது பொதுக்கருத்து நிலையாகப் பிரகடனப்படுத்தப்படுகிறது. பின்னர் அந்தக் கருத்து நிலையே மக்களால் ஏற்றுக் கொள்ளவும் வைக்கப்படுகிறது.

ஆகவே, ஒரு சமூகத்தின் பெரும்பான்மைத்தரப்பினரின் விருப்பம் என்பதும் தெரிவென்பதும் எப்போதும் சரியாக இருக்கும் என்றில்லை. பெரும்பான்மையானவர்கள் அங்கீகரித்துள்ளனர் என்பதற்காக அந்தத் தரப்பை நாம் முற்றுமுழுதாக கேள்விக்கும் விமர்சனததுக்கும் இடமின்றி அங்கீகரிப்பது பொருத்தமானதேயல்ல. சரியான - நியாயமான காரணங்களுடன் ஒரு நிலைப்பாடும் அதனுடைய கோரிக்கைகளும் உள்ளனவா என்று சிந்திப்பது முதன்மையாகும். அவ்வாறு அவை இருக்குமானால், அவற்றைப் பொதுத் தளத்தில் அங்கீகரிப்பதில் பிரச்சினையே இல்லை.

ஆகவே, இன்று ஈழத்தமிழர்களால் கோரப்படுவதும் விரும்பப்படுவதும் எது என்பதைக் குறித்த குழப்பங்கள் அதிகரித்துள்ளன. சுயநிர்ணய உரிமையை மக்கள் கோருகிறார்கள். அவர்களுடைய அரசியல் இருப்புக்கும் சமூக பண்பாட்டுப் பிராந்திய அடையாளப் பேணுகைக்கும் அதுவே பொருத்தமானது என்று கூறுகின்றனர் ஒருசாரார்.

'இல்லை, தமிழர்கள் வரலாற்று ரீதியாகத் தனி இராச்சியத்திற்கு உரியவர்களாகவே இருந்துள்ளனர். சமகால அனுபவங்களின் நிலையிலும் இலங்கைத் தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக வாழமுடியாது என்றே நிரூபிக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழர்களை இலங்கை அரசு பொறுப்புடனோ, கண்ணியமாகவோ, நம்பிக்கையாகவோ நடத்தியதில்லை. ஆகவே அவர்கள் பிரிந்து செல்வதைத தவிர, அவர்களுக்கு வேறு தீர்வும் மார்க்கங்களும் இல்லை' என்கின்றனர் இன்னொரு தரப்பினர்.

'இவ்வளவு இழப்புகளுக்குப் பிறகும் தமிழர்கள் விட்டுக்கொடுப்புகளைச் செய்யவே முடியாது. அப்படிச் செய்தால், அது போராட்டத்திற்கும் அதன் பேரால் இறந்தோருக்கும் விடுதலைக் கனவுகளோடு மரணித்தோருக்கும் அதற்காகத் தியாகங்கள் செய்தோருக்கும் செய்கின்ற துரோகமாகும்' என்று சொல்கிறார்கள் இன்னொரு சாரார்.



'இலங்கையின் பூகோள அமைவு, இந்தப் பிராந்திய அரசியல் யதார்த்தம், சர்வதேச அரசியல் போக்கு போன்றவற்றின் காரணமாக இலங்கைத் தீவில பிரிவினைக்குச் சாத்தியமேயில்லை. அவ்வாறு ஒரு பிரிவினை ஏற்பட்டாலும் அதனால், பாதகமான விளைவுகளே ஏற்படும். பிறசக்திகளின் தலையீடுகளும் கையாளல்களும் மேலும் அதிகரித்துக் கொந்தளிக்கும் ஒரு நிலையே உருவாகும்' என்று கூறுகின்றனர் மற்றொரு தரப்பினர்.

ஐக்கிய இலங்கைக்குள் இனங்களின தனித்துவங்களைப் பேணும் வகையிலான சம உரிமைகள் வழங்கப்பட்டு, சமூகங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேணும் ஆட்சியை ஸ்தாபிப்பது கடினமானதல்ல. சுதந்திரத்தின் பின்னரான இலங்கையர்களின் கசப்பான - கடினமான - சிதைவுகள் நிறைந்த வரலாற்றனுபவங்களை முதன்மைப்படுத்தி புதிய அரசியல் வழியொன்றை உருவாக்குவதன் மூலம் இதைச் சாத்தியப்படுத்தலாம் என்று வேறொருசாரார் வாதிடுகின்றனர்.

இவ்வாறு தமிழ்த்தரப்பிலேயே பல நிலைப்பாடுகளும் சிந்தனைப் போக்குகளும் உண்டு. ஆனால், சாதாரண மககளைப் பொறுத்தவரை அவர்கள் இரண்டு பிரதான வகைப்பாடுகளையுடைய நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளனர்.

1. பிரச்சினை இல்லாமல் இருக்க வேணும். ஆட்சியை யார் நடத்தினாலும் பிரச்சினை இல்லை. ஆனால், இனரீதியான பழிவாங்கல்களும் ஒதுக்கல்களும் பாரபட்சங்களும் இருக்கக் கூடாது. இனவாதத்தை அரசியல்வாதிகளே உருவாக்குகிறார்கள். அதில்லை என்றால், பிரச்சினை குறைவு என்போர்.

2. சிங்கள அரசுகள் தமிழர்களை ஒரு போதுமே கண்ணியமாகவும் பொறுப்பாகவும் நம்பிக்கையாகவும் நடத்தாது. ஆகவே, தமிழர்கள் பிரிந்து செல்வதே ஒரே வழியாகும் என்போர்.

இதுதான் பொதுமக்களில் பெரும்பாலானோர் கொண்டிருக்கின்ற இரண்டு பிரதான போக்குகளாகும். இந்த இரண்டு போக்குகளையும் அவற்றுக்குரிய அடிப்படைகளை முன்வைத்து, பிராந்திய, சர்வதேச அரசியற் சூழமைவுகளில் எது சாத்தியம்? எவை சாத்தியப்படக் கூடியன என்று சிந்திக்க வேண்டும். ஆனால், அவ்வாறு ஒரு பொதுத்தளத்தில் சந்தித்து விவாதிக்கக்கூடிய நிலைமையும் கலந்துரையாடக் கூடிய மனப்பாங்கும் தமிழ்த் தரப்பினரிடையே இல்லை.

அரசியலாளர்களிடம் மட்டுமல்ல, ஊடகவெளியிற் கூட ஒரு பொதுத் தளத்தை விரித்து வைக்கக்கூடிய - பொதுத்தளமொன்றில் விவாதங்களை நடத்தக்கூடிய அரங்குகள் மூடப்பட்டேயிருக்கின்றன. ஆகவே, மக்களின் விருப்பங்களை அவரவர் தமக்கு ஏற்ற விதத்திலும் சாத்தியப்படக்கூடிய வகையிலும் நிறம்மாற்றிக் காண்பிக்கின்றனர்.

எட்டப்படும் தீர்வை தமிழ்த் தரப்பிலுள்ள தீவிர நிலையாளர்கள் எவ்வாறு அணுகுவர்? தீர்வொன்று நியாயமான முறையில் எட்டப்பட வேண்டும் என்று பலரும் விரும்புகின்றனர். ஆனால், இப்போதைய சூழலில் இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு கிட்டவான ஒரு தீர்வே சாத்தியமாகலாம் என்ற எதிர்பார்ப்பே பலரிடமும் உண்டு. இந்தத் தீர்வுதான் கிட்டுமென்றால், அதை 1987 இலேயே பெற்றிருக்கலாமே என்ற வருத்தமே அவர்களிடம் காணப்படுகிறது.

ஏனென்றால், இலங்கை அரசாங்கதைப் பொறுத்தவரை அது, இலங்கை - இந்திய உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களையே ஏற்றுக்கொள்வதற்கு மறுத்து வருகிறது. ஆகவே, அதைக் கடந்த விடயங்களை அது முன்வைக்காது என்றே நம்பலாம்.

இதையும் கடந்து வெளி அழுத்தங்கள், நெருக்குவாரங்களினால் சில விடயங்களுக்கு அது ஒத்துக்கொள்ளலாம். ஆனால், அது எதிர்பார்ப்புகளுக்கு அப்பாலானதே. எனவே, இந்த நிலையில் தனித்தமிழீழத்தை வலியுறுத்துவோரும், அதற்குச் சமாந்தரமான தீர்வொன்றை எதிர்பார்ப்போரும் நிச்சயமாக தற்போது வைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் அதிகபட்சத் தீர்வை நிச்சயமாக எதிர்ப்பர்.

இப்போதே - பேச்சுகள் குறித்த கேள்விகளும் சந்தேகங்களும் கிளப்பப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம். ஆகவே, தீர்வொன்று எட்டப்படும்போது அதைக் குறித்த வாதப்பிரதிவாதங்கள் கொந்தளிப்பு நிலைக்குச் செல்லும்.

இதேவேளை தீர்வொன்று எட்டப்பட்டால், அந்தத் தீர்வைச் சிங்கள மக்கள் அங்கீகரிப்பார்களா?

முன்னரே சொல்லப்பட்டுள்ளதைப் போல சனங்கள் இயக்கப்படும் பொமமைகளாகவே வைக்கப்பட்டுள்ளனர். முன்வைக்கப்படும் தீர்வைப்பற்றியும் எட்டப்பட்ட தீர்வைப்பற்றியும் மக்களிடையே செய்திகளை எடுத்துச் செல்லும் முறையிலேயே சிங்கள மக்களின ஆதரவு -எதிர்ப்புச் செயற்பாடுகள் அமையும்.

ஆகவேதான், தீர்வொன்று எட்டப்படுமிடத்து அதற்கு எதிர்ப்பலைகள் எழாத வகையில் பேச்சுகளின்போதே ஏனைய எதிர்ச்சக்திகளுடனும் சமாந்தரமாகப் பேசவேண்டும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. எதிர்ப்பலைகள் கிளம்பலாம் என்ற அச்சத்திலேயே அரசு பல விடயங்களைச் சாத்தியப்படுத்துவதற்கும் உடன்படுவதற்கும் பின்னிற்கும் நிலையை இதன்மூலமாகத தவிர்க்கலாம். இந்த எதிர்ச்சக்திகளே மக்களைத் தீர்வுக் கெதிராகக் கிளர்ந்தெழ வைப்பன. இதில் எதிர்நிலைப்பாடுடைய அரசியற்கட்சிகள், புத்திஜீவிகள், ஊடகங்கள் எனப்பல தரப்புகளும் உள்ளன.

இவற்றைச் சரியான முறையில் கையாண்டால், சிங்கள மக்கள் தீர்வை அங்கீகரிப்பதில் பிரச்சினைகள் குறைவாகவே இருக்கும். அதற்கு சிங்களத் தரப்பில் உள்ள தீவிரச் சக்திகள் இடமளிக்குமா?

இந்தத் தீவிர சக்திகளின் உளவியல இரண்டு விதமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

1. இந்தப் பூமிப்பந்தில் சிங்கள இனம் .என்பது, இலங்கையில் மட்டும் காணப்படும் ஒரு மிகச் சிறிய இனமாகும். இந்த இனத்துக்கு இந்தியாவின் மூலமாக - குறிப்பாக தமிழர்களின் மூலமாக நெருக்கடிகள் எப்போதுமுண்டு. ஆகவே, பிரிந்து செல்லக் கூடிய சுயநிர்ணய உரிமையை அளிப்பதன்மூலமாக எதிர்காலத்தில், இந்திய (தமிழ்நாட்டின்) உதவியுடன் தமக்கெதிரான ஆபத்துகளை விளைவிக்கக்கூடும் என்ற அச்சம்.

அத்துடன் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கின்ற புலம்பெயர் தமிழர்கள் மேற்கின் செல்வாக்கை அதிகளவில் கொண்டிருப்பதால், மேற்கின் ஆதரவைப் பெற்ற தமிழர்கள் இன்னொரு முனையில், தமக்கு அச்சுறுத்தலாக இருப்பர் என்ன உணர்வு.

2. இலங்கையில் சிங்களவர்கள் அதிகமானவர்கள். அவர்களே, பண்பாட்டிலும் தொன்மையிலும் மூத்தவர்கள். தமிழர்கள் இந்தியாவின் வாலாக இங்கே வந்து குடியேறியவர்கள் என்ற ஒரு கருது நிலை.

இந்த இரண்டு விதமான எண்ணங்களும் அவர்களை ஒரு எதிர்த் தீவிர நிலைக்குக் கொண்டு போகிறது. ஆகவே, எட்டப்படும் தீர்வானது, எந்த நிலையிலும் சிங்கள மக்களுக்கு எதிரானதும் அல்ல. அது சிங்கள மக்களைப் பாதிப்புக்கு உட்படுத்தப்போவதும் இல்லை. ஆகவே இதைக்குறித்து அவர்கள் அச்சமடையவே தேவையில்லை என்ற விளக்கத்தை - தெளிவை ஏற்படுத்த வேண்டும்.

இல்லையெனில், நிச்சயமாக சிங்களத் தீவிர நிலையாளர்கள் எத்தகைய தீர்வுக்கும் எதிர்ப்பையே வெளிபபடுத்துவர்.

# கூடுதல் கட்டணம் அறவிடும் தனியார் பேருந்துகள்; மக்கள் விசனம்

(கொக்கிளாய்)

முல்லைத்தீவு கொக்கிளாய் வழிச் செல்லும் தனியார் பேருந்துகள் அதிக கட்டணத்தை அறவீடு செய்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவில் இருந்து கொக்கிளாய் செல்லும் தனியார் பேருந்துக்கான கட்டணமாக 100 ரூபா அறவீடு செய்யப்படுகின்றது.

அண்மையில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலையேற்றத்திற்கு ஈடு இணைக்கும் வகையில் பஸ் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த விலையேற்றத்தோடே கொக்கிளாய் - முல்லைத்தீவு செல்லும் தனியார் பேருந்துக் கட்டணங்கள் 80 ரூபாவில் இருந்து 100 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை கொக்கிளாய் - முல்லைத்தீவு இடையிலான போக்குவரத்து தூரம் 36KM ஆகக் காணபபடுகின்றது. இத் தூரத்திற்கான கட்டணம் 70 ரூபாவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் வெளியிட்டுள்ள பேருந்து கட்டண அதிகரிப்பு பட்டியலில் 36KM தூரத்திற்கான கட்டணம் 66 ரூபாவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தில் இணைந்ததாகவே முல்லைத்தீவு - கொக்கிளாய் வழிச் செல்லும் பேருந்துகள் செயற்படுகின்றன.

27 வருடங்களின் பின்னர் போரின் அவலங்களை பெரிதும் சுமந்து களைத்து தற்போது தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னரும் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தி அறவீடு செய்தல் பெரிதும் கவலையளிப்பதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலை மேலும் தொடரவிடாது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(17)

# மூன்று அதிகாரிகளுக்கு "சுப்றா" தர பதவியுயர்வு

(நல்லூர்)

இலங்கை நிர்வாகசேவையைச் சேர்ந்த யாழ்.மாவட்ட அதிகாரிகள் மூவருக்கு சுப்றா தர பதவி உயர்வு கிடைத்துள்ளது. கடந்த வருடம் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் இ.நி.சே. தரம் - 1 இல் இருந்த அதிகாரிகளான நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கரவெட்டி பிரதேச செயலர் வரதீஸ்வரன் ஆகியோரே இவ்வாறு பதவி உயர்வுகளைப் பெற்றவர்களாவார்.(26)

# மூன்று மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணம்

மூன்று மாத காலத்திற்கான சமுர்த்தி உலருணவு நிவாரண விநியோகம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய உலருணவுப் பொருட்களே தற்போது யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களூடாக விநியோகிக்கப்படுகின்றன.

சமுர்த்தி முத்திரை பயனாளிகள் தமது பிரிவு சமுர்த்தி அலுவலர்களுடன் தொடர்புகொண்டு டோக்கன்களைப் பெற்று அவற்றை பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களில் சமர்ப்பிப்பதன் மூலம் தமக்கான பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (26)

**பாவனையாளர் அதிகார சபையின்**

# நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்கள் மற்றும் விலைப்பட்டியல் இன்றி பொருட்களை விற்பனை செய்த 13 வர்த்தகர்களுக்கு 60 ஆயிரத்து 500 ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ். நகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது 13 வர்த்தகர்களுக்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா 10 வர்த்தகர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும், 3 வர்த்தகர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

# முதிர்ச்சியடையாத குழந்தைகள் நிலையத்தின் தேவைகளுக்கு லயன்ஸ் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 1234 குழந்தைகளில் முதிர்ச்சியடையாத குழந்தைகள் உரிய வசதிகள் இல்லாத காரணத்தால் 84 குழந்தைகள் இறந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் நாளுக்கு நாள் முதிர்ச்சியடையாத குழந்தைகளின் நிலையத்திற்கான தேவைகள் அதிகரித்துச் செல்வதாக வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து சர்வதேச லயன்ஸ் கழகத் தின் 306 B-1 மாவட்டத்தினர் ஏழு மில்லியன் ரூபா பெறுமதியான இன்குபேட்டர்கள், குழந்தைகளின் உடல் வெப்பநிலையைப் பேணிக் காக்கும் உபகரணங்கள், போட்டோதெரபி கருவிகள் மற்றும் குழந்தைகளின் நிறையை அளக்கும் கருவிகள் ஆகியவற்றை வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி கருவிகள் சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. இதேவேளை இவ்வமைப்பு 26 மில்லியன் ரூபாவில் பல்வேறு உதவிகளை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதியின்றி பயன்படுத்த வேண்டாம்

வடமாகாணத்திலுள்ள அரச காணிகளை, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுதியின்றி, பயன்படுத்த வேண்டாம் என சுற்றறிக்கை மூலம் அமைச்சு. கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சுற்றறிக்கை வட பகுதியிலுள்ள அரச திணைக்களங்கள், கல்வி வலயங்கள், பாடசாலைகள் என்பவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## அபகீர்த்தியை...

தெரிவித்தார். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை கூட்டத்தொடரின்போது பல நாடுகள் வரவேற்றன.

மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரின்போது இலங்கைக்கு கிடைத்த வரவேற்பு குறித்து மகிழ்ச்சியுற முடியுமாயின், மறுபுறம் உலகின் பலமிக்க நாடான அமெரிக்கா அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் செயற்பட முயன்றது.

இத்தகைய நாடொன்றுடன் போட்டியிடுவதற்காக ஏனைய நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்வது கடினமாயினும் தற்போது அந்த நாடுகளின் ஆதரவு கிடைத்துவருகிறது.

இலங்கை தொடர்பில் கூட்டத்தொடரில் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றமை பொருத்தமானது அல்லவென அணிசேரா நாடுகள் தெளிவான கருத்தினை முன்வைத்திருந்தமை இதற்கு சிறந்த உதாரணம். அத்துடன் 53 நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய நாடுகள் அமைப்பானது புற அழுத்தங்களின்றி இலங்கை பயணிப்பதற்காக கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்துள்ளன.

எனினும் இலங்கைக்கு எதிரான பிரேரணை மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் போது சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் தொடர்ந்து நிலவி வருகிறது.

இதுவரை உத்தியோகப்பூர்வ பிரேரணை எதுவும் முன்வைக்கப் படவில்லை எனக் கூறிய அமைச்சர், எதிர்வரும் 14, 15ஆம் திகதிகளில் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக மீண்டும் ஜெனிவா செல்லவுள்ளேன். இதன்போது எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கத் தயார் நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## இலங்கைக்கு எதிரான...

அறிக்கையில் குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு எதிரான தீர்மானங்கள், மனித உரிமைக் குழுவின் ஆக்க பூர்வமான பேச்சுகளையும் அனைத்துத் தரப்புகளின் ஒத்து ழைப்புடனான அணுகுமுறையையும் வலுவிழக் கச் செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நோக்கம் சார்ந்த, வெளிப்படைத் தன்மை கொண்ட, அரசியல் கலவாத, மோதல்களை ஆதரிக்காத கொள்கைகளில்தான் மனித உரிமைக் குழுவின் வலிமை அடங்கியிருக்கிறது. இந்தப் பண்புகளைக் காக்க வேண்டுமென்றால், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தன்மை, உறுதியான பேச்சுக்கள், ஒத்துழைப்பு ஆகியவற்றை உறுதிசெய்ய வேண்டும் என்று இந்தியா கூறியிருக்கிறது.

இதேவேளை, ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளதாக இந்து நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்ற தி.மு.க.வின் நிலைப்பாட்டை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரடியாகத் தெரிவித்திருந்தார். இதன்போதே இவ்விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவுடன் ஆலோசித்து பொருத்தமான முடிவு எடுப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்துள்ளதாக டி.ஆர். பாலு இவ்வூடகத்திடம் தெரிவித்துள்ளார்.

## இலங்கை மீது...

தாங்கள் தொடர்ந்து அவதானித்து வந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இலங்கையில் உண்மையான சமரசத்தை அடையும் பொருட்டு ஐ.நா. மனித உரிமைச் சபையானது, திடமான முடிவுகளை இந்த அமர்வில் எடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

குற்றச்சாட்டுக்களின் பார தூரத்தையும், இலங்கை தொடர்ந்து மறுப்பு கூறுவதை தவிர அதைச் சரிசெய்ய முன்வராமையையும் வைத்துப்பார்த்தால் இதில் சுயாதீன சரவதேச விசாரணை முக்கியமானதாகிறது என்று வடஇலங்கை கத்தோலிக்க குருமார் தெரிவித்துள்ளனர்.

நல்லிணக்க ஆணைகுழு, உண்மை காணுதலிலும், பொறுப்பு கூறலிலும் முறையான விசாரணையை நடத்தாவிட்டாலும் சில சமரசம் காணக்கூடிய வழி முறைகளை பரிந்துரைத்திருக்கிறது. மேலும் ஒரு வருடத்திற்கு முன்னர் இடைக்கால அறிக்கை ஒன்றையையும் வெளியிட்டிருந்தது. ஆனால் இதுவரையும் எதுவும் செயற்படுத்தப்பட வில்லை. எனவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை குறுகியகாலத்தில் செயல்படுத்த வைக்கவேண்டுமென்றும், வருகிற அமர்வுகளில் ஒரு சர்வதேசப் பொறிமுறையை அமைத்து நியாயமான விசாரணை ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்றும், ஐ.நா. மனித உரிமை சபைக்கு அனுப்பி வைததுள்ள கடித்தத்தில் வட இலங்கை கத்தோலிக்க குருமார் சபை கேட்டுள்ளது.

## இலங்கைக்கான தூதுவரை...

இவர் ஈராக்கிற்கான அமெரிக்காவின், துணைத் தூதுவராகவும், லெபனான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் அமெரிக்கத் தூதுவராகவும் முன்னர் பணியாற்றியிருந்தார்.

அத்துடன், 1996 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை சென்னையிலும், 1996 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை இஸ்லாமா பாத்திலும் அந்நாட்டுக்கான தூதரக பொறுப்பதிகாரியாகவும் இவர் பணியாற்றியுள்ளதுடன், ஆபிரிக்க நாடுகள் சிலவற்றின் தூதரகங்களிலும் பணியாற்றியுள்ளார்.

அதேவேளை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடனான உறவுகள் குறித்த கொள்கைகளை வகுக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களதின் தென்னாசிய விவகாரங்களுக்கான பிரிவின் பிரதி உதவிச் செயலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடனான உறவுகளில் முறுகல் நிலை தோன்றியுள்ள நிலையில், தனது மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான மைக்கல் ஜே சிஸனை அமெரிக்கா தூதுவராக நியமிக்கவுள்ளது.

## ஜெனிவா மனித உரமை...

அமர்வில் பங்குகொள்ளாத போதிலும் எமது பிரதிநிதிகள் அங்கிருந்து அவதானிப்புகளை மேற்கொண்டு வருவதுடன் தகவல்களையும் உடனுக்குடன் வழங்கி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பேரவையில் அங்கம் வகிக்கின்ற 47 நாடுகளுக்கு கடிதங்களை எழுதியிருக்கின்றது. அந்த கடிதங்கள் தமக்கு கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் கூட்டமைப்புக்கு பதில்கள் கிடைத்துள்ளன.

அத்துடன் பேரவையின் கவனத்தை ஈர்ப்பதன் பொருட்டு தமிழ் மக்களின் நிலைமைகள் சார்ந்த மேலதிக ஆவணங்களை திரட்டும் பணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கியுள்ளது. மிக விரைவில் அந்த ஆவணங்கள் அங்கு அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மக்கள் விரும்பாத எதனையும் செய்வதற்கு தயாரில்லை. கடந்த காலம், நிகழ்காலத்தில் கூட்டமைப்பு மக்களை விட்டு விலகி நின்றது கிடையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேசிய மனித...

பரிந்துரைகளுக்கமைய, இராணுவத்தினரும் கடற்படையினரும் யுத்தக்குற்ற முறைப்பாடுகள் குறித்து விசாரணை நீதிமன்ற மொன்றினை உருவாக்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்த இரண்டு இலடசத்து 90 ஆயிரம் மக்களில், அண்ணளவாக 95 சதவீதமானவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். அனைத்து தடுப்பு முகாம்களும் மூடப்பட்டுள்ளன. அத்தோடு 10 ஆயிரத்திற்கும் அதிகமான முன்னாள் போராளிகள் சமூகத்தில் மறு ஒருங்கிணைப்பு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை தொடர்பிலான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் கருத்துக்கள் அவர்களின் நம்பகத்தன்மை குறித்து கேள்விகொள்ள வைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு படைமுகாமில் கருத்தரங்கு

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2 நாள் கருத்தரங்கு நேற்றைய தினம் தியத்தலாவ படைமுகாமில் ஆரம்பமானது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கு இன்றும் நடைபெறவுள்ளது.



தியத்தலாவ படைமுகாமில் அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு நேற்று ஆரம்பமாகியுள்ளது.

நாட்டின் எதிர்காலத்துக்கான நிகழ்ச்சி நிரல் எனும் கருப்பொருளில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தியத்தலாவ படைமுகாமிலேயே தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இக்கருத்தரங்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரம், அரசியல் தொடர்பாடல், அரசியல் மற்றும் நிர்வாக மீளமைப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் தனித்தனியான பொறுப்புகள் என்ற தொனிப்பொருளில் இந்தச் செயலமர்வு இடம்பெறுகிறது.

# 260 இலங்கையரை நிர்க்கதியாக்கிய கனேடிய பிரஜை மீது விசாரணை

சட்டவிரோதமாக கனடாவுக்கு அனுப்பிவைப்பதாக தெரிவித்து 260 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களை டோகோவில் நிர்க்கதியாக்கிய பிரதான சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தற்போது வெளிநாடொன்றில் வசித்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. அவர் கனடாவில் பிரஜா உரிமை பெற்றவர் என்பதும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

269 பேரை கனடாவுக்கு அனுப்பிவைப்பதாக தெரிவித்து தலா எட்டு இலட்சம் ரூபா முதல் 15 இலட்சம் ரூபா வரையான தொகையை சந்தேகநபர் வசூலித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பு ஊழல் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். மட்டக்களப்பைச் சேர்ந்த 45 பேர் டோகோவில் நிர்க்கதியாகியுள்ளமை சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

டோகோவில் நிர்க்கதியாகியிருந்த 269 பேரில் 103 பேர் ஏற்கனவே நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த வருட இறுதிக்குள் யாழ்தேவி கிளிநொச்சிக்கு

(கொழும்பு)

வடக்கிற்கான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் மிகவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரை ஒரு பகுதியாகவும் கிளிநொச்சி, பளையிலிருந்து காங்கேசன்துறை வரைக்கும் இன்னொரு பகுதியாகவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அதற்கான தண்டவாளங்கள் கனரக வாகனங்கள் மூலம் கிளிநொச்சியிலும் பளையிலும் கொண்டுவரப்பட்டுள்ளன.

தற்போது ரயில் சேவை வவுனியா ஓமந்தை வரைக்கும் நடைபெறுகிறது. 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் யாழ்தேவி கிளிநொச்சி வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கடனை அடைப்பதற்காகவே எரிபொருள் விலையேற்றம்

(கொழும்பு)

அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரித்தன் காரணம், தனியார் வங்கிகளில் பெற்ற கடனை திருப்பி செலுத்துவதற்காகவே என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



மாத்தளை நகரத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் தனியார் வங்கிகளிடம் இருந்து பெற்ற கடனை அடைப்பதற்காகவே, இவ்வாறு எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளது.

இதனால் மக்கள் பெரும் துயரங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஜனநாயக செயற்பாடுகள் இலங்கையில் செயலிழப்பு

இலங்கைக்கு எதிரான அமெரிக்க யோசனைக்கு ஆதரவு வழங்குமாறு சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான குழு, ஐ.நா. மனித உரிமை பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பாக செயற்பட இதுவே ஒரேயொரு சந்தர்ப்பம் எனவும் அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது. யுத்தத்துக்குப் பின்னர், ஜனநாயக அமைப்புகள் வலுவிழந்துள்ளதாகவும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ள அக்குழு, அதற்கு அப்பால் சர்வதேச விசாரணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளது.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை கண்டித்து நேற்றும் ஆர்ப்பாட்டம்



(அம்பாறை)

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணையை கண்டித்து அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பிரதேச செயலகத்தின் முன்றலில் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் ஆர்பாட்டத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

# இலங்கையில் சிறப்புப் படைகள் வெளியான தகவல் தவறாகும்

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் சிறப்புப் படைகள் எதுவும் இலங்கையில் நிலைகொண்டிருப்பதாக வெளியான தகவல்கள் தவறானவை என அமெரிக்கா அறிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திலேயே அமெரிக்க பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உடன்பாடுகளின்படியே இவர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணியக அதிகாரிகள், இருநாட்டு உறவுகளை ஊக்குவிக்கக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பயிற்சி நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்றும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பள்ளிக்கூடங்கள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றை புனர்நிர்மாணம் செய்யும் வேலைத்திட்டங்களுக்காக அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கட்டளை மையத்தினூடாக கொழும்பிலுள்ள தூதரகம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 9 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்புப் படையினர் அண்மைக் காலங்களில் இலங்கையுடன் இணைந்து சில மருத்துவ மற்றும் மனிதாபிமான பணிகளுக்கான கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)

# இ.போ.ச. கோண்டாவில் சாலை நுளம்பு பெருக்க வழக்கு முடிவு

(திருநெல்வேலி)

இலங்கைப் போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலைக்கு எதிராக நுளம்பு பெருக்கத் தடைச்சட்டத்தின் கீழ், யாழ். நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நுளம்புகள் பெருகும் வகையில் சாலையில் கழிவுப் பொருட்களை வைத்திருந்தார்கள் எனவும், கழிவு நீரை அகற்றாமல் தேங்கி நிற்கும் நிலையில் கழிவு நீர் காணப்பட்டதாகவும் நுளம்பு பெருக்கத் தடைச் சட்டத்தின் கீழ் இ.போ.ச. கோண்டாவில் சாலை மீது வழக்குத் தொடரப்பட்டது.

கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.என். பிறேம்குமாரும், கொக்குவில் பரிசோதகர் க.மதனகுமாரும் இவ்வழக்கை 2010 ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதம் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த வியாழக்கிழமை இவ்வழக்கு மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சுகாதாரப் பரிசோதகர்களினால் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

தமது அறிவுத்தல்களின் படி சாலையில் நுளம்புகள் பெருகாத வகையில் வேலைகள் நடைபெற்று முடிவுற்றுள்ளதாக அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து யாழ். நீதவான் மா.கணேசராசா வழக்கினை முடிவுக்குக் கொண்டுவந்து தொடர்ந்து இதேநிலையில் கோண்டாவில் சாலையை நல்ல முறையில் பராமரித்தல் வேண்டும் என பொது முகாமையாளருக்கு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

யாழ். மாவட்டத்தில் அரச நிறுவனமொன்றுக்கு எதிராக நுளம்பு பெருக்கத் தடைச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# பிரதேச செயலர் இருவர் இடமாற்றம்

(கொழும்பு)

இரண்டு பிரதேச செயலர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர். இதன்படி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராக கடமையாற்றிய த.முகுந்தன் கண்டாவளைப் பிரதேசத்துக்கும், கண்டாவளைப் பிரதேச செயலராக கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நாளை திங்கட்கிழமை கடமைகளை உரிய பிரதேச செயலகங்களில் பொறுப்பேற்கவுள்ளனர்.





யாழ்ப்பாண வாழ்வியலின் பெருமைகள் கூறும் பத்திரிகைகளில் பிரசுரமாகிய இலகு தமிழில் உருவான 29 கட்டுரைகளின் தொகுப்பு நூல்
"பூத்திடும் பனந்தோப்பு"
26.02.2012 இல் வெளியாகியது. அனைத்துப் பிரதிகளும் கையிருப்பு முடிந்து விட்டதால் மறுபிரசுரமாகிறது. அன்பான வாசகர்களே நாடெங்கும் உள்ள பிரபல புத்தகசாலைகளில் சில தினங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
விலை ரூபா 300/= மட்டும்.

"தேன்தமிழ்"
கைதடி வடக்கு,
கைதடி.

வேதநாயகம் தபேந்திரன்
மின்னஞ்சல் vethaben@yahoo.com

(C/1312)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.